கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு—28

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தெய்வச் சேக்கிழார் நாயனு ரருளிய

# ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் புராணம்

[உரையுடன்]

க்ஷேத்திரத் திருவெண்பாவும் உரையும் அடங்கியது

உரையாசிரியர் :

கோவை - வழக்கறிஞர் - சிவக்கவிமணி -

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை-14

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

20—12—1953

உரிமை ஆசிரியர்க்கே] [விலை அணு 12

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு—28

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தெய்வச் சேக்கிழார் நாயனு ரருளிய

# ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் புராணம்

[உரையுடன்]

க்ஷேத்திரத் திருவெண்பாவும் உரையும் அடங்கியது

உரையாசிரியர் :

கோவை - வழக்கறிஞர் - சிவக்கவிமணி -

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை-14

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

20—12—1953

உரிமை ஆசிரியர்க்கே]

[விலை அணு 12

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 47. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம்

தொகை

“ ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன் ”

—திருத்தொண்டத் தொகை - (7)

வகை

“ சத்தித் தடக்கைக் குமரனற் றாதைதன் றனமெல்லாம்
முத்திப் பதமோரோர் வெண்பா மொழிந்து “முடியரசா
மத்திற்த் மும்மைநன் றலரற் காயைய மேற்ற”லென்னும்
பத்திக் கடலை யடிகளா கின்றநம் பல்லவனே. ”

—திருத்தொண்டர் திருவந்தாதி - (56)

விரி

4046. வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையு மிகையொழியும் வகையடக்கிச்
செய்யசடை யவர்சைவத் திருநெறியா லரசளிப்பார்
ஐயடிக ணீதியா லடிப்படுத்துஞ் செங்கோலார் ; க

4047. திருமலியும் புகழ்விளங்கச் சேணிலத்தி லெவ்வுயிரும்
பெருமையுட னினிதமரப் பிறபுலங்க ளடிப்படுத்துத்
தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேற் சைவமுடன்
அருமறையின் றுறைவிளங்க வரசளிக்கு மந்நாளில், உ

4048. மன்னவரும் பணிசெய்ய வடநூறென் றமிழ்முதலாம்
பன்னுகலை பணிசெய்யப் பாரளிப்பா “ ரரசாட்சி
இன்ன”லென விகழ்ந்ததனை யெழிற்குமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினார். ங

புராணம் : இனி, நிறுத்த முறையானே, ஆசிரியர், எட்டாவது, பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கத்துள், எட்டாவது, ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது புராணங் கூறுகின்றார் ; ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும்பகுதி.

**தொகை:** ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது அடியார்க்கும் நான் அடியேனாவேன்.

பேரும் மரபும் தொகைநூல் தொகுத்துக் கூறியது.

**வகை:** சத்தி...மொழிந்து - ஞான சத்தியாகிய வேலாயுதத்தை ஏந்திய வலிய கையினையுடைய குமாரக் கடவுளின் தாதையாராகிய இறைவரது பதிகள் எங்கும் முத்திப் பதத்தினையே குறிக்கோளாகக் கொண்ட ஒவ்வோர் வெண்பாப் பாடி ; முடியரசாம்...என்னும் - அரனுக்காக ஐயமேற்றல், முடிசூடிய அரசாகும் அத்தன்மைக்கு மும்மையாலும் நன்றாகும் என்று எடுத்துக்கூறிய ; ஐயடிகளாகின்ற பல்லவனே - ஐயடிகள் என்னும் பெயரினையுடைய பல்லவரே ; பத்திக்கடல் - பத்தியின் கடல் போன்றவர்.

சத்தி - குமாரக்கடவுளின் ஞானசத்தி எனப்படும் வேல். தானமெல்லாம் - பதிகள் பலவற்றிலும் ; முத்திப்பதம் - முத்தி காதலிக்கும் குறிப்புடைய ; க்ஷேத்திர வெண்பா என்னும் இந்நூலில் வெண்பாத்தோறும் யாக்கை நிலையாமையினைப் பலவாறும் இடித்து எடுத்துக் கூறி, வீடுபேற்றின் சாதனமாகிய சிவவழிபாட்டினை வற்புறுத்தியுள்ள நிலை குறித்தது.

ஒரோர் வெண்பா - ஒரு பதிக்கு ஒரு வெண்பாவாக; " முடியரசாம்...ஏற்றல்" என்னும் - இது அந்நூலின் 10-வது வெண்பாவின் பொருள். அதன் பெருமையும், ஓரரசர் சொல்லாதலும், இந்நாயனாரது அடிமைப் பண்பின் மேன்மையும் ஒருங்கே விளங்கவுள்ளது, அவ்வெண்பாவாதலின் அதனை ஈண்டெடுத்து விதந்தோதினார்.

" படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலா மாண்ட
முடியரசர் செல்வத்து மும்மைத்—தொடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி யுண்ப துறும் " (க்ஷேத்திர வெண்பா - 10)

என்பது அத்திருப்பாட்டு ; அநற்கு என்பது எதுகை நோக்கி அத்திற்கு என வந்தது.

அரற்காய் ஐயம் ஏற்றல் - அரற்காய் - அரனுக்குத் தொண்டுபட்டு அதற்காக - அதுவே பற்றாக என்க. அரற்காய் என்பது பிறிதினியல்பு நீக்கிய விசேடணம் ; இரத்தல் இழிவு என்பது நீதியாதலின் ஐயமேற்றுண்ணல் எவையும் விரும்பத் தக்கனவல்ல ; அவை இகழ்ச்சியே ; ஆனால் அரனுக்குத் தொண்டுபட்டு ஐயமேற்றல் முடியாசினும் மும்மைச் சிறப்புடையது என்பதாம்.

கடல் - கடல் போன்றவரைக் கடல் என்றார் ; பெயரும் பண்பும் வரலாறும் வகைநூல் வகுத்துரைத்தது.

**விரி:** 4046. (இ - ள்) வையநிகழ்...தோன்றி - உலகில் புகழ் சிறந்து அரசியற்றும் பல்லவர்களது மரபிலே முறைமையாக அவதரித்து ; வெய்ய... அடக்கி - கொடிய வறுமையும் பகையும் அவற்றால் வரும் துன்பங்களும் நீங்கும்படி அடக்கி ; செய்ய...அரசளிப்பார் - சிவந்த சடையினையுடைய இறைவரது சைவத் திருநெறியின்வழியே நின்று அரசாட்சி செய்வாராகி ; ஐயடிகள்...செங்கோலார் - ஐயடிகள் காடவர்கோன் என்னும் அரசர் அரசநீதி முறையினாலே உலகமெல்லாம் தம்மடியின்கீழ் வாழும்படி செய்யும் செங்கோ லாணையினை யுடையாராய் ; க

4047. (இ - ள்) திருமலியும் புகழ் விளங்க - செல்வங்கள் மிகும் புகழ் விளங்கவும்; சேண்...அமர - விரிந்த இவ்வுலகத்தில் எல்லா வுயிர்களும் பெருமையோடு இனிதாக வாழவும்; தருமநெறி தழைத்தோங்க - நீதிமுறை தழைத்து விளங்கவும்; தாரணி...துறைவிளங்க - உலகில் சைவநெறியுடனே அரிய வேதநெறியும் விளங்கவும்; பிறபுலங்கள் அடிப்படுத்து - பகைப் புலங்களை ஒடுக்கித் தம்கீழ்த் தங்கும்படி அடங்கச் செய்து; அரசளிக்கும் அந்நாளில் - அரசு செய்கின்ற அந்நாளிலே ;— உ

4048. (இ - ள்) மன்னவரும் பணிசெய்ய - அரசர்களும் தமது ஏவல் வழியே பணிசெய்து ஒழுக; வடநூல்...பணிசெய்ய - வடமொழியும் தென்றமிழும் முதலாக எடுத்துச் சொல்லப்படும் கலைகள் தமது வயப்பட்டு நிற்கவும்; பாரளிப்பார் - உலகங் காவல் புரிவாராகிய அவர்; அரசாட்சி...இழிச்சி - உலகம் புரக்கும் அரசாட்சி துன்பம் செய்வது என்று இகழ்ந்து நீத்து அதனை அழகிய தமது மகன் மேலதாக வைத்துப் பட்டம் சூட்டி; நன்மைநெறி...ஆயினர் - நல்ல சிவநெறியிலே நின்று திருத்தொண்டினை விரும்பிச் செய்வாராயினர். ந

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

4046. (வி - ரை) வையம் நிகழ் பல்லவர்-ஆசிரியர் தம் காலத்தில் ஆட்சிபுரியும் அரசமரபு என்பார் நிகழ் என்றார்; பல்லவர் - சோழர் வழி மரபுகளுள் வந்த அரச குலம்; இவர்களுக்குரியது இடபக்கொடி என்பர். ஆளுடைய நம்பிகள் காலத்தில் இம்மரபினர் ஆட்சி புரிந்தமை "உரிமையாற் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும், பெருமையார்" (நம்பி - கோயில்) என்ற திருவாக்கினால் விளங்கும். அமணர் வசப்பட்டு மதிமயங்கி ஆளுடைய அரசுகளை மிறை செய்து, பின், அவரது பெருமை கண்டு சிவன் அடிமைப்பட்ட மகேந்திர வருமரும் இம்மரபினரே யாவர்; நீண்ட தொடர்பும் அரசர் பெருமையும் குறிக்க வையம் நிகழ் என்றார்.

கலி - வறுமை; பகை - உட்பகை புறப்பகைகள்; மிகை - இவற்றால் வரும் துன்பங்கள்; குற்றம்; நெறி - நீதி; வெய்ய - கொடிய; "கொடிது கொடிது வறுமை கொடிது" (ஔவை) "நல்குர வென்னுந் தொல்விடம்" (திருவா).

சைவத் திருநெறியால் அரசளிப்பார் - உலகினைச் சைவநெறியின் கண்ணே நின்று நிலைபெற ஆள்பவராய்.

செங்கோலார் - அளிப்பார் - (4046) - அளிக்கும் நாளில் (4047) - இகழ்ந்து - இழிச்சி - அளிப்பாராயினர் (4048) என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடிபு படுத்திக் கொள்க. 1

4047. (வி - ரை) திருமலியும் புகழ் - திரு - எண்வகை உலகநிலைச் செல்வங்கள்; புகழ் - ஈகையால் வருவது.

சேண் நிலம் - சேண் - தூரத்தே அகன்ற; பரவிய. தூரதேயம் என்றலுமாம்.

ஐயடிகள் - இஃது இந்நாயனாரது பெயர். பல்லவர்கள் பெரும்பாலும் வடமொழிப் பெயர்களையே இட்டுக்கொள்ளுதல் மரபு என்பர்; அப்படியாயின், இவரது இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை, "பத்திக்கடல் ஐயடிகள்" என்று வகைநூலில் துதிக்கப்படுவதனால் இவர் இளவயதிலிருந்து இறைபத்தி மிகுந்து ஒழுகிய நிலையினால் ஐயடிகள் (ஐ - தெய்வம்) என்று வழங்கப்பட்டார் போலும்; காடவர் - (பல்லவர்) என்பது இவரது அரச மரபு. இவர் அரசு புரிந்த தலைநகரம் காஞ்சிபுரம். "காஞ்சிக் காடவர்" (4052) என்று ஆசிரியர் அறிவித்தருள்கின்றார்.

எவ்வுயிரும் பெருமையுடன் இனிதமர - மக்களே யன்றி எல்லா வுயிர் வருக்கங்களும், அரசனது காவல்பெற்றுக் குறைவின்றி இனிது வாழ; கழறிற்றறிவார் நாயனாரது வரலாறு இங்கு நினைவுகூர்தற்பாலது. அமர - விரும்பி வாழ.

பிறபுலங்கள் - திறம்பி நின்ற பகைப் புலங்கள் ; அடிப்படுத்து - பகைவரால் வரும் துன்பங்களை நீக்கி அவர்களை அடக்கித் தம் வயப்படுத்தி.

தரும நெறி - இஃது உலகியற் றருமநீதி முறை.

சைவமுடன் அருமறையின் துறை - சைவநெறியும் வேதத்துறையும் ; " வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க " (1899) ; இங்குச் சைவத் திறத்தினை முன்கூறியது இந்நாயனார் பற்றி ஒழுகிய சைவ ஒழுக்கத்தினைச் சிறப்பாகக் குறித்தற்கு. சிறப்புப் பற்றி உடன் உருபைச் சைவத்துடன் புணர்த்தி ஓதினார். 2

4048. (வி - ரை) வடநூல்...பணிசெய்ய - என்றது இந்நாயனார் வடமொழி தென்றமிழ்மொழி யிரண்டிலும் வல்லவராய் அவ்விரு கலைகளின் றிறத்தினையும் உறுதிப் பொருளின்கட் செல்லும்படி செலுத்துதலை உணர்த்தற்கு. இப்பண்பு இந்நாயனாரருளிய க்ஷேத்திர வெண்பாவினால் அறியப்படும். இந்நாயனார், கழறிற்றறிவார் நாயனார்போல முடிமன்னரா யிருந்தும் கலைகளினும் வல்லவராயினார். இது தமிழரசர்களின் சிறப்பு. கலை - கலைகள் பலவும் ; பணி செய்தல் - கலைகளிற் றேர்ச்சி யுறுதல்.

அரசாட்சி இன்னல் என இகழ்ந்து - உலக அரசாட்சி துன்பந் தருவதேயாம் என்று அதனை இகழ்ந்து ஒதுக்கி ; தன்கீழ் வாழும் எல்லா வுயிர்களுக்கும் ஐந்து வகைப் பயமும் தீர்த்து அறங்காக்கும் அருமைப்பாடு பற்றியும், தம் தம் உயிர்க்கு வீடுபேற்றுக்கு வழியாதலின்றிப் பெருந் தொடக்குக்கே வழியாகிப் பிறப்புக்கு ஏதுவாகும் நிலைபற்றியும் இன்னல் என்று துணிந்தார். " இருளுடை யுலகங் காக்குமின்னல் " என்பது கம்பன் பாட்டு.

இழிச்சி - இகழ்ச்சிக் குறிப்புப்படக் கூறியது கவிநயம் ; தாம் இகழ்ந்த ஒன்றைத் தம்குமாரனுக்கு ஆக்கியது தகுதியாமோ, எனின், உலகத்தின், இக்காவலுக்கு ஒருவன் வேண்டும் என்ற கடமையினைச் செய்யும் அளவேயன்றி, அஃதுயர்வான பொருள் என்பதனாலன்று என்பது குறிப்பு ; இழிச்சுதல் - இறக்குதல்.

நன்மைநெறித் திருத்தொண்டு - அரசாட்சி போலன்றி நன்மை வழியிலே சென்று நன்மையே பயக்கும் என்பது.

தொண்டு நயந்தளிப்பார் - முன்னர்த் தொண்டுநெறி அரசளிப்பார் அதனை விட்டு திருத்தொண்டொன்றினையே அளிப்பார்.

ஆயினார் - ஆக்கச்சொல் மேம்பாடு குறித்தது. 3

4049. தோண்டுரிமை புரக்கின்றார் சூழ்வேலை யுலகின்கண்
அண்டர்பிரா னமர்ந்தருளு மாலயங்க ளானவெலாங்
கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடனேற்ற பணிசெய்தே
வண்டமிழின் மொழிவெண்பா வோரொன்று வழுத்துவார் ; ௪

4050. பெருத்தெழுகா தலின்வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்தாடல் புரிந்தருளுஞ் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வெண்பாமென் மலர்புனைந்தார். ௫

**4049.** (இ - ள்) *தொண்டு உரிமை புரக்கின்றார் - திருத்தொண்டினது உரிமைச் செயல்களை வழுவாமற் காத்து வருகின்ற நாயனார் ; சூழ்வேலை...இறைஞ்சி - கடல் சூழ்ந்த இந்நில உலகத்திலே தேவர் பெருமானாராகிய சிவபெருமான் விரும்பி விளங்க எழுந்தருளிய ஆலயங்க ளெல்லாவற்றையும் சென்று கண்டு வணங்கி ; திருத்தொண்டின்...செய்தே - திருத்தொண்டுக் கேற்ற கடமையாகிய பணிவிடைகள் எல்லாவற்றையும் செய்தே ; வண்டமிழின்...வழுத்துவார் - ஒவ்வோர் பதியினும் வளப்பமுடைய தமிழின் வெண்பா ஒவ்வொன்றாகச் சேர்த்தித் துதிப்பாராகி ;* ௪

**4050.** (இ - ள்) *பெருத்தெழு காதலில் வணங்கி - பெருகி எழுகின்ற காதலால் வணங்கி ; பெரும்பற்ற...நேர்ந்திறைஞ்சி - தண்ணிய பெரும் பற்றப் புலியூரில் திருச்சிற்றம்பலத்தின்கண் திருக்கூத்தியற்றும் சிவந்த சடையினையுடைய கூத்தரது திருக்கூத்தினை நேர்பட்டுக் கும்பிட்டு ; நெடுந்தகையார்...புனைந்தார் - பெருந்தகைமை யுடையார் விருப்பத்துடனே செந்தமிழினிய வெண்பாவாகிய மெல்லிய மலரைப் புனைந்தருளினர்.* ரு

*இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.*

**4049.** (வி - ரை) **உரிமை** - *உரிமைச் செயல்கள்* **புரத்தல்** - *வழுவாமற் காத்தல் ; முட்டாது செய்தல்.*

**அண்டர்பிரான்...கண்டிறைஞ்சி** - *தேவ தேவராகிய சிவபெருமானுடைய பதிகள் தோறும் யாத்திரையாகச் சென்று வணங்கி.* **எல்லா(மு)ம்** - *அனைத்தையும் முற்ற என்பது குறிப்பு ; முற்றும்மை தொக்கது. "கோயில்களெல்லா மெய்தி" (4051) என மேலும் கூறுதல் காண்க.*

**அண்டர்பிரான்...ஆன எலாம்** - *இவ்வடி முற்றுமோனை.* **உலகின்கண் - ஆலயங்கள்** - *சிவனை வணங்கி நலம் பெறும் வாய்ப்புக்கள் இந்நிலவுலகில்தான் உள்ளன என்பது குறிப்பு. "புவனியிற்போய்" (திருவா).*

**திருத்தொண்டின் கடன் ஏற்றபணி** - *இவை ஏனைய சரியைத் தொழில்களும் அடியார் வழிபாடும் ஆம். ஏகாரம் தேற்றம்.* **கடன்** - *முறைமை.*

**வழுத்துவார்** - *வழுத்தும் நியமம் பூண்டாராகி ;* **ஒரோன்று** - *ஒவ்வோர் பதிக்கு ஓர் ஓர் வெண்பாவாக ;* **வழுத்துவார்** - *துதித்தலை மேற்கொண்டனராகி.*

**இந்நியமத்தினை** *முதலிற் றொடங்கி* **ஆற்றின இடம் தில்லைச் சிற்றம்பலமாம்** *என்பது மேல்வரும் பாட்டாலுணர்த்தப்படும்.* 4

**4050.** (வி-ரை) **பெருத்தெழு காதல்** - *மேன்மேலும் வளர்ந்தோங்கும் பெருவிருப்பம். ஆராமையால் மிகுகின்ற ; "ஆராமை" (3570) ;* **காதலால்**-*அன்புடன்.*

**பெரும்...சிற்றம்பலத்து** - *"தில்லைச்சிற்றம்பலமே" என்ற திருவெண்பாவை விரித்தது.*

**நேர்ந்து** - *சேர்ந்து கண்டு முற்பட்டு வணங்கி ; "சேர்" என்பது வெண்பா.*

**மென்மலர்** - *நுண்ணிய பொருளுடைமையால் மென்மலர் என்றார் ; மலர் போன்றதை மலர் என்றார். மலர் - மலர்களாலாகிய மாலைக்கு ஆகுபெயர் ; அது போன்ற பாமாலைக்கு உவமையாகுபெயர் ; நால்வகைப் பூக்களால் இயன்ற மாலை போல நால்வகைச் சொற்களால் தொகுப்பது பாமாலை ; க்ஷேத்திரக் கோவைத் திருப்பதிகம் முதலியவை காண்க.*

**இன் வெண்பா** - **இன்** - *இனிய சொல்லும் பொருளும் உடைய ; நேரிசை வெண்பா என்ற யாப்பின் பாகுபாடும் குறித்தது. "இன்மொழி வெண்பா" (4049); "இன்றமிழ் வெண்பா" (4051).* 5

## க்ஷேத்திரத் திருவெண்பா

### தில்லைத் திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். ௧

* * *

### திருமயானம்

உய்யு மருந்திதனை யுண்மினென வுற்றாருங்
கையிற் பிடித்தெதிரே காட்டியக்கால்—பைய
வெழுந்திருமி யான்வேண்டே னென்னாமு னெஞ்சே
செழுந்திரும யானமே சேர். ௨௪

திருச்சிற்றம்பலம்

4051. அவ்வகையா லருள்பெற்றங் கமர்ந்துசில நாள்வைகி
இவ்வுலகிற் றம்பெருமான் கோயில்களெல் லாமெய்திச்
செவ்வியவன் பொடுபணிந்து திருப்பணியேற் றனசெய்தே
யெவ்வுலகும் புகழ்ந்தேத்து மின்றமிழ்வெண் பாமொழிந்தார். ௬

(இ - ள்) அவ்வகையால்...வைகி - அந்த வகையினாலே திருவருளினைப் பெற்று அப்பதியில் அமர்ந்து சில நாட்கள் தங்கியருளி; இவ்வுலகில்...எய்தி - இவ்வுலகத்திலே தம்பெருமானார் வீற்றிருக்கும் கோயில்கள் எல்லாவற்றிலும் சென்று சேர்ந்து; செவ்விய...செய்தே - செம்மையாகிய அன்பினாலே வணங்கி ஏற்றன வாகிய திருப்பணிகளையும் செய்தே; எவ்வுலகும்...மொழிந்தார் - எல்லாவுலகங் களும் புகழ்ந்து ஏத்துகின்ற இனிய தமிழ் வெண்பாக்களைப் பாடித் துதித்தனர்.

(வி - ரை) அவ்வகையால்-முன்பாட்டிற் கூறிய அந்த வகையினாலே; "மென் மலர்" புனைதலாலே. இவ்வுலகில் - "உலகின்கண்" (4049).

அங்கு - திருத்தில்லையில். அமர்ந்து - விரும்பியிருந்து; அமர்தல் - விரும்புதல்.

ஏற்றன - திருப்பணி - செய்தே - என்க. "கடன் ஏற்ற பணி செய்தே" - (4049). அரசர் நிலைக்கும் அன்பின் பெருக்குக்கும் ஏற்றவாறு.

எவ்வுலகும் புகழ்ந்தேத்தும் - தமிழ் வெண்பா - எவ்வுலகத்தோர்களும் இத் துதிகளைச் சொல்லி இவற்றால் இறைவனை ஏத்தும் என்றும், இவ்வெண்பாக்களையே புகழ்ந்து என்றும் உரைக்க நின்றது; வெண்பாக்களால் ஏத்தும் - வெண்பாக்களை ஏத்தும் என இருவழியும் உரைக்க. தமிழ் - இன் - வெண்பா என்க.

மென்மலர் - தொடர்ச்சியாகிய மாலையா யின்றிப் பதிதோறும் ஒவ்வோர் தனி வெண்பாக்களாம் என்பார் மலர் என்றார். 6

4052. இந்நெறியா லரனடியா ரின்பமுற விசைந்தபணி
பன்னெடுநா ளாற்றியபின் பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து வழியன்பர் மருங்கணைந்தார்
கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவரை யடிகளார். ௭

(இ - ள்) இந்நெறியால்...ஆற்றியபின் - இந்த நெறியினாலே சிவனடியார்கள் இன்பமடையத் தமக்கு இசைந்த பணிகளைப் பல நீண்ட காலமாகச் செய்திருந்த

பின் ; பரமர்...மருங்கணைந்தார் - இறைவரது திருவடியின் கீழே சிவனுலகத்திலே வழிவழி நிற்கும் அன்பர்களுடன் சார அணைந்தனர் ; கன்னி...ஐயடிகளார் - வெல்லப்படாத மதில் சூழ்ந்த காஞ்சிபுரத்தில் அரசியற்றிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

(வி - ரை) அரனடியார்...பணி - பதிகள் தோறும் பரமனைப் பணிந்து வெண்பாப் பாடித் திருத்தொண்டு செய்ததனோடு அரன் அடியார்கட் கிசைந்த பணிகளையும். முன்பாட்டில் அரன்பணியும், இப்பாட்டில் அடியார் பணியும் கூறினார்.

மன்னு சிவலோகம் - மன்னுதல் - அழியாத நிலைபெற்றிருத்தல்; வழிஅன்பர்- சிவநெறியில் வழிவழி வந்த அடியவர்கள். சிவலோகத்துவழி - என்றலுமாம்.

மருங்கு அணைந்தார் - அன்பர்களுடன் கூடக் கலந்து அணைந்தனர். “ அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் ” (திருவா). மருங்கு - அருகில்.

காஞ்சிக் காடவர் - இவர் காஞ்சிபுரத்தைத் தலை நகராகக்கொண்டு ஆண்டவர் ; காடவர் - சோழர்களின் ஒரு குலத்தினர் பெயர் ; சோழருட் சில மரபுடையோர் ஆற்காட்டையும் ஆண்டமையால் இப்பெயர் பெற்றனர் என்பர். கன்னி மதில் - அழியாத மதில் ; காஞ்சியின் மதில் பழம் பாடல்களிலும் சிறப்பிக்கப்பட்ட பழமையையும் பெருமையையும் உடையது. 7

4053. பையரவ மணியார மணிந்தார்க்குப் பாவணிந்த
ஐயடிகள் காடவனா ரடியிணைத்தா மரைவணங்கிக்
கையணிமான் மழுவுடையார் கழல்பணிசிந் தனையுடைய
செய்தவத்துக் கணம்புல்லர் திருத்தொண்டு விரித்துரைப்பாம். ௮

(இ - ள்) பையரவம்...வணங்கி - நச்சுப் பையினையுடைய பாம்பினை மணிமாலையாக அணிந்த இறைவர்க்கு வெண்பா அணிந்த ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது திருவடியிணைத் தாமரைகளை வணங்கி, (அத்துணை கொண்டு) ; கையணி...விரித்து உரைப்பாம் - கையில் அணிகொண்ட மழுவினை ஏந்திய இறைவரது திருவடியைப் பணியும் சிந்தனையினை யுடைய செய்தவம் பொருந்திய கணம்புல்ல நாயனாரது திருத்தொண்டினை விரித்துச் சொல்வோம்.

(வி - ரை) இது கவிக்கூற்று ; ஆசிரியர், தமது மரபுப்படி இதுவரை கூறி வந்த புராணத்தை முடித்துக் காட்டி, மேல்வரும் புராணத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றார். இதன்மேல் வருவது சருக்க முடிவிற் கூறும் நம்பிகளது துதி.

பை - நச்சுப்பை ; அரவமாகிய மணிமாலை என்றலுமாம் ; மணியையுடைய மாலை. மணி - நாகமணி. ஆரம்-ஆத்தி என்று கொண்டு, அரவத்தினையும் ஆத்தியையும் அணிந்த என்றலுமாம்.

பா - வெண்பாவாகிய மென்மலர். அரவ மணிந்தார்க்குப் பா அணிந்த - விடமுடைய அரவத்தை வேண்டா என்று விலக்கிப் பா அணிந்தார் போல ; “ அரவமொன்று...பூணாதே - பொன்னா மற்றொன்று பூண் ” (27 - அற் - அந்.) என்ற அம்மையார் திருவாக்குக் கருதுக.

கையணி மழுவுடையார்-கையில் அழகிய மழுவினை ஏந்தியவர்; அணி-அழகிய; மழுவுக்கு அழகாவது சிவனுக்குரிய சிறப்புக் கருவியாகச் செம்மைதரும் இயல்பு.

சிந்தனையுடைய தவம் - செய்தவம் - என்க. சிந்தனை மாறாது அருமையாகச் செய்த தவம் நிரம்பப் பெற்ற.

சரிதச் சுருக்கம் : ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் :— இப்பெயருடைய நாயனார் சோழ மரபில் பல்லவர் குலத்தில் அவதரித்துக் காஞ்சிபுரத்திலே அரசாண்டவர் ; உலகில் வறுமையும் பகையும் துன்பமு மின்றி, எல்லா உயிர்களும் ஒருங்கு நன்கு வாழவேண்டு மென்னும் கொள்கை யுடையவராய் நீதியினால் பகைகளை அடக்கிச் சைவத் திருநெறியில் அரசளித்தார். இவர் வடமொழி தென்றமிழ் என்ற இரண்டிலும் கலைஞானங்களிலும் வல்லவர்.

அரசாட்சி துன்பந் தருவதாகும் என்று துணிந்து, அதனை இகழ்ந்து, தம்து மகனை முடி சூட்டினர். தாம் தில்லைத் திருச்சிற்றம்பலம் முதலிய சிவதலங்களிற் சென்றிறைஞ்சித் தலங்கள் தோறும் ஒரோர் வெண்பாப்பாடி வழிபட்டு வந்தனர் ; தமக்கு ஏற்றபணிகளையும் செய்தனர் ; அடியார்கள் இன்பமுற அடியவர்களின் வழிபாடும் செய்தனர். இவ்வாறு பணிசெய்து சிவலோகத்தில் வழியன்பர் மருங்கணைந்தார்.

குறிப்பு : இவர் பாடியருளிய வெண்பாக்கள் யாவும் யாக்கை நிலையாமையை வற்புறுத்தி இறைவரைத் தலந்தோறும் சென்று வழிபட்டு முத்திக்கு வழிதேடும் கருத்தினை உபதேசிக்கும் வகையில் அமைந்துள்ளன; இவை க்ஷேத்திரத் திருவெண்பா என்ற பெயரால் தொகுத்து வகுக்கப்பட்டுப் பதினோராந் திருமுறையினுள் நம்பியாண்டார் நம்பிகளாற் சேர்க்கப்பட்டுள்ளன.

கற்பனை :—1. கலியும், (வறுமை - பிணி முதலியன) பகையும் மிகையொழியும் வகையடக்கி அரசு ஆளுதலும், எல்லா உயிர்களும் இன்பமுற வாழ்தலும் நீதியரசர் மேற்கொள்ளும் குறிக்கோள்களாம்.

2. பிறவாகிய பகைப்புலங்களை அடிப்படுத்தும் செயல் நீதிமுறையில் மேற்கொள்ளத்தக்கது.

3. சைவத் திருநெறியால் அரசளித்தல் சிறப்புடையது.

4. சிறந்த அரசர்கள் உலகில் தருமநெறி தழைக்கவும், அதனோடு சைவமும் வைதிகத் துறையும் விளங்கவும் அரசளிப்பர்.

5. அரசாட்சி இன்னல் தருவது என்று இகழ்ந்து அதனைத் துறந்து சிவன் பணியிற் செல்லும் அரசர்களையுடைய மேன்மை தமிழ்நாட்டுக்கே உரியது.

6. வடமொழி தென்மொழிகளிலும் கலைகளிலும் வல்லராய்த் தெய்வப் பெரும் புலமை பெற்றிருத்தல் அரசர்க்குப் பெருஞ் சிறப்பு. அம்மேன்மையும் அரசர்களுள் தமிழரசர்க்கே யுரியது. கழறிற்றறிவார் நாயனார் வரலாறும், இளங்கோவடிகள் வரலாறும், புறநானூற்றில் பாடினோராகிய அரசர் வரலாறுகளும் காண்க.

7. சிவதல யாத்திரை செய்தலும், மற்றும் பணி செய்தலும், அடியார் மகிழ வழிபடுதலும் முத்தி சாதனங்களாம்.

தலவிசேடம் :—காஞ்சிபுரம் - முன் உரைக்கப்பட்டது ; II - பக். ௧௫௪௭ ; திருமேற்றளி III - பக்கம் ௫௫௦ பார்க்க. திருக்கச்சி மேற்றளி இந்நாயனாரது வழிபடு தலம் என்பர்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணம் முற்றும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி நாயனார் துதி

## தொகை

" ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே "

—திருத்தொண்டத் தொகை - (7)

## வகை

" பல்லவை செங்கதி ரோனைப் பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன், றென்புக லூரரன் பாற்றூய்ய செம்பொன்கொள்ள
வல்லவ, னாட்டியத் தான்குடி மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன், றன்பதி நாவலூ ராகின்ற நன்னகரே "

—திருத்தொண்டர் திருவந்தாதி - (57)

## விரி

4054. உளத்திலொரு துளக்கமிலோ முலகுய்ய விருண்டதிருக்
களத்தமுது குன்றர்தரு கனகமாற் றினிலிட்டு
வளத்தின்மலி ரேழுலகம் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத் தார்வினையின் குழிவாய்நின் றெமையெடுத்தார். ௧

துதி : திருத்தொண்டத் தொகைப் பதிகப் பாட்டுக்களில் நான்காமடியின் பிற்பகுதியில் வரும் பொருள், ஆளுடைய நம்பிகள் தம்மைக் கூறும் பகுதியாதலின், அதனை நம்பியாண்டார் நம்பிகளும் ஆசிரியரும் அவரது துதியாக வைத்து வகுத்தும் விரித்தும் உரைக்குமாறு, நம்பிகளது சரிதத்தில் ஒவ்வோர் பகுதியை வைத்துப் போற்றியது.

**தொகை :** முன்கூறிய அடியார்க்கு ஆளாவதோடு திருவாரூர் அம்மானுக்கும் ஆரூரன் ஆகிய நான் அடிமையாவேன் ; முன்கூறிய அடியேன் யாரென்னில் ஆரூரில் அம்மானுக்காளாகவுள்ள ஆரூரன் என்றலுமாம்.

**வகை :** பல்லவை...சொல்லவன் - சூரியனைப் பற்களை பறித்த சிவபெருமானது பாதங்களைப் புகழ்கின்ற சொற்களையுடையவரும் ; தென்புகலூர் - வல்லவன் - அழகிய திருப்புகலூர் இறைவர்பால் (செங்கல்லையே) தூய செம்பொன்னாகப் பெற வல்லவரும் ; நாட்டியத்தான்குடி...நல்லவன் - திருநாட்டியத்தான் குடியில் விளங்க எழுந்தருளிய இறைவராகிய மாணிக்கவண்ண நாதருக்கு அன்புடையவரும் ஆகிய நம்பியாரூருடைய ; பதி...நன்னகரே - ஊர் திருநாவலூர் என்கின்ற நல்ல நகரேயாம்.

பல்லவை - அவை பகுதிப் பொருள் விகுதி ; செங்கதிரோன் - சூரியன் ; சூரியனைப் பற்களைப் பறித்தது தக்கயாக சங்காரத்தின் நிகழ்ச்சி ; " சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை வாரி நெரித்தவா றுந்தீபற " (திருவா) தூய்ய-தூய;

பொன்பெற வல்லவன் - செங்கல்லே செழும் பொன்னாகப் பெறும் வன்மையுடைய வர் என்றது நம்பிகளது சரிதவரலாறு ; மாணிக்கவண்ணர் - திருநாட்டியத்தான் குடியின் இறைவர் பெயர். எண்ணும்மைகள் தொக்கன. சொல்லவனும் - வல்ல வனும் - நல்லவனும் - ஆகிய நம்பிகளின் பதி என்க.

விரி : 4054. (இ - ள்) உலகுய்ய...முதுகுன்றர் தரும் - உலகமுய்யும் பொருட்டு விடமுண்டதனால் இருள் கொண்ட கண்டத்தினையுடைய திருமுதுகுன்ற வாணர் தந்த ; கனகம்...குளத்தில் எடுத்தார் - பொன்னைத் திருமணி முத்தாற்றில் இட்டுப், பின், வளத்தினால் மலிந்து ஏழுலகங்களும் வணங்கும் பெரிய திருவாரூரிற் கமலாலயத் திருக்குளத்தில் எடுத்தவராகிய நம்பிகள் ; வினையின்...எடுத்தார் - வினையாகிய பெருங்குழி வாயினின்றும் என்னைமேல் எடுத்தார்; (ஆதலின்), உளத்தில் ஒரு துளக்கமிலோம் - உள்ளத்தில் ஒரு சிறிதும் நடுக்கமில்லோம்.

(வி - ரை) எனை எடுத்தார் - (ஆதலின்) துளக்கமிலோம் என்று கூட்டுக.

துளக்கம் - நடுக்கம் ; " வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும், அஞ்சி யுனையடைந்தே னையா பராபரமே " (தாயுமானார்) என்றபடி பிறவியால் வரும் கேட்டுக்கு அஞ்சியமையால் வருவது நடுக்கம் ; வினைக்குழியினின் றெடுக்கப் பட்டமையால் வினை காரணமாக வரும் பிறவி யில்லையாகும். ஆதலின் அதன் பொருட்டு வரும் துளக்கமு மில்லையாயிற்று. நம்பியாரூரர் திருவடிச் சார்ந்தார்க்குப் பிறவியில்லை என்பது கருத்து. சார்ந்தாரைக் காக்கும் தன்மை பற்றி நம்பிகளைப் போற்றியவாறு.

வினையின் குழி - வினை செய்தாரை ஆழமாகிய பிறவியின் அழுத்துதலால் குழி எனப்பட்டது.

உலகுய்ய இருண்ட - இருண்ட - விடமுண்டமையால் இருள் உடையதாயிற்று ; விடமுண்டது தேவர்களுய்தற் பொருட்டு ; தேவர்கள் உய்ய உலகம் காவல் பெறு தலின் உய்குய்ய என்றார் ; தேவர்களைக் காத்த அடையாளங் கண்டு, பற்றி, வந் தடைந்து உலக முய்யும்படி என்றலுமாம்.

முதுகுன்றர் தரும்...குளத்தில் எடுத்தார் - திருமுதுகுன்றத்தில் இறைவர் தந்த 12000 பொன்னையும் அங்குத் திருமணி முத்தாற்றில் இட்டு, இங்குத் திருவாரூர்க் குளத்தில் வரப்பெற்றனர் நம்பிகள் என்பது சரிதம். (ஆற்றிலிடுதல் - முன், 3261 - 3264 திருப்பாட்டுக்களிலும், குளத்தில் எடுத்தல், 3281 - 3292 - திருப்பாட்டுக் களிலும் உரைக்கப்பட்டன.) எடுத்தார் - நம்பிகள் ; ஆறு - திருமணிமுத்தாறு ; குளம் - கமலாலயம்.

ஏழுலகு மருவுபெறும் என்பது பாடமாயின் பிருதுவித் தலமாதலின் ஏழுலகிற்கு மூலமாதலை விளக்கினார் எனப் பொருள் கொள்க என்றனர் முன் உரைகாரர். எல்லா உலகத்துயிர்களும் முத்தி பெற வந்து வணங்கும் என்றலுமாம். 9

சுந்தரமூர்த்தி நாயனார் துதி முற்றும்.

## பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# க்ஷேத்திரத் திருவெண்பா

## முன்னுரை

இது பதினோராந் திருமுறையிற் கோவை செய்யப்பட்ட தெய்வப் பிரபந்தங்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் : ஐயடிகள் காடவர்கோன் நாயனார்; இவர் திருத்தொண்டத் தொகையுள் போற்றப்பட்ட அறுபத்து மூன்று உண்மை நாயன்மார்களுள் ஒருவர். இவர் காடவர் என்னும் பல்லவ அரச மரபினர். ஏறக்குறைய 1500 ஆண்டுகளின்முன் வாழ்ந்தவர். இம்மரபினர் காஞ்சிபுரத்தைத் தம் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தனர். தமிழிலும் வடமொழியிலும் வல்லவர்; வேற்றுப் புலங்களை வென்று சைவமும் வைதிகமும் விளங்க அரசளித்தார்; அரசாட்சி துன்பந் தருவது என்று துணிந்து, அதனைத் தமது மகன்மேல் இழிச்சித், திருத்தொண்டு செய்யத் தொடங்கினார். சிவபெருமான் அமரும் ஆலயங்களெல்லாம் சென்று வணங்கி ஏற்ற திருப்பணி செய்து, பதிதோறும் ஒவ்வோர் வெண்பாப் பாடித் துதிப்பாராகித், திருத்தில்லையினை அடைந்து வணங்கித் திருவெண்பாப் பாடியருளினார். அங்குச் சில நாள்கள் தங்கிப், பின்னர், இறைவரது பிற பதிகளிலும் சென்று வணங்கி அவ்வாறே ஓரோர் தலத்துக்கு ஓரோர் வெண்பாவாகப் பாடி அருளிச்செய்து, பல நாள்கள் வாழ்ந்து சிவபெருமானது திருவடி நிழற்கீழே சிவலோகத்தில் அன்பர் கூட்டத்துடன் அணைந்தனர்.

இஃது ஒவ்வோர் தலத்துக்கு ஒவ்வொரு வெண்பாவாக அங்கங்கும் சென்று வழிபடும்போது அருளப்பட்டது. ஆதலில் ஒரு காலத்து ஓர் இடத்துச் செய்யப்பட்ட நூலன்று.

**நூல்**

இப்போது கிடைத்துள்ளவை 24 வெண்பாக்களேயாகும். இவை யாவும் நேரிசை வெண்பாக்களேயாம். ஆசிரியர் இதனை ஒரு நூலாகவேனும் மாலையாகவேனும் எண்ணிப் பாடினாரல்லர். அவர் சென்று வணங்கிய பல்வேறு பதிகளிற் பல்வேறு காலத்துப் பாடிய ஒவ்வோர் தனி வெண்பாக்களை உடனிருந்தோரும் பிறரும் சேமித்தவாறு கிடைத்தவையே பிற்காலத்தவராற் கோவை செய்யப்பட்டு இந்நூலாகத் திகழ்கின்றது என்பது கருதப்படும். பதியொன்றுக்கு ஓரோர் வெண்பாவே ஆசிரியர் ஓதியருளியது ஒரு சிறப்பு. இஃது ஊர் வெண்பா என்னும் இனத்தைச் சேர்ந்ததாகும்.

பாட்டுக்கள் முழுதும், யாக்கை, செல்வ முதலியவற்றின் நிலையாமையே பற்றிய காஞ்சித்திணையைச் சார்ந்தன. "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும், நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" (தொல் - புறத். 78).

**நூல் நுதலிய பொருள்**

சில நாளில் உடல் மூத்துக் கீழே விழும்; சாவு வரும்; அரசு செல்வம் முதலியவை நிலையா; ஆதலின் உலகீர்! உடனே சிவபெருமானைத் தொழுது உய்மின்; அவரைத் தொழுதடைவதற்கு அவர் ஆன்மாக்களின்மீது வைத்த கருணையினாலே வெளிப்பட வீற்றிருந்தருளும் பதிகளை அடைந்து வணங்குவதே வழியாம் என்பது இந்நாயனார் இதனால் உலகருக்குச் செய்யும் நல்லுபதேசம்.

இவர் முடியரசரா யிருந்தும் நிலையாமை கண்டு அதனைத் துறந்து தொண்டு செய்து சிவன் பதிகள் தோறும் சென்று வழிபட்டார் என்ற சரிதத்துக்கு இவர் நூல் அகச்சான்றாகும். இதுபற்றிச் சிறப்பாக 10, 22, 23 பாட்டுக்கள் பார்க்கத் தக்கன ; அவற்றுள் 10-வது பாட்டினையே எடுத்துக் காட்டித் திருத்தொண்டர் திருவந்தாதியினுள் (56) நம்பியாண்டார் நம்பிகள் இவரது சரிதத்தினைக் கூறிப் போற்றுதல் காண்க.

**ஆராய்ச்சிக் குறிப்புக்கள்**

" சூழ்வேலை யுலகின்கண், அண்டர்பிரா னமர்ந்தருளு மாலயங்க ளானவெல்லாங், கண்டிறைஞ்சி...வழுத்துவார் " (4) என்றும், " பன்னெடுநா ளாற்றியபின் " என்றும் (7) ஆசிரியர் பெருமான் சரிதங் கூறி யருளுமாற்றால் இவர், பற்பல நாடுகளில் பற்பல காலம் தல யாத்திரை செய்து வாழ்ந்திருந்தனர் என்பது துணியப்படும் ; ஆயின் இப்போது கிடைத்திருக்கும் இந்நூல் வெண்பாக்களி னின்றும் காணும் போது இந்நாயனார் சோழ நாட்டினும், தொண்டை நாட்டினும் பெரும்பான்மை சென்று வழிபட்டமை கருதப்படும். சோழர்களே தொண்டை நாட்டினையும் பல காலங்கள் அரசாண்டமை நாட்டுச் சரிதம் பேசும். உஞ்சேனை-மாகாளம் (13) என்ற பதியினை இவர் பாடியிருத்தலின் தமிழ்நாட் டெல்லையினையும் தாண்டிச் சென்றமையும் கருதப்படும். உஞ்சேனை மாகாளம் என்பது விக்கிரமாதித்தனது தலைநகரம். அங்கு விளக்கமாயுள்ள காளியினால் பூசிக்கப்பட்ட பதியாதலின் இது மாகாளம் எனப்படும். தலம் பற்றாத பொதுப்பாடல்களும் உண்டு. (10 - 23)

இனி, இப்பாட்டுக்கள் யாவருக்கும் விளங்கும் எளிய இனிய நடையில் அமைந்தனவாய், மெல்லோசையுடைய மேம்பட்ட போக்கினை யுடையனவாய்ச், சொற்சுவை பொருட்சுவை மிகவுடையனவாய், நகைச்சுவை பெருமிதச்சுவை முதலிய சுவைகளையும் உடையனவாய்ப், படித்துப் பயில்வோர்க்கு அவற்றாற் கருதப்பட்ட உறுதிப் பயனை உள்ளூற உறுத்தி ஊட்டும் திட்பமுடையனவாய் விளங்குகின்றன. சேரமானாரையும் இதனாசிரியரையும் போன்ற இத்தகைய தெய்வத் தமிழ்ப்பெரும் புலவர்களாகிய முடி அரசர்களையும் கொண்டு விளங்கிய பெருமை தமிழகம் ஒன்றிற்கே உரியது. உண்மை நாயன்மார்களுள் ஒருவராகிய ஆசிரியரால் அருளப் பட்டமையால் இதனை 11-ம் திருமுறையில் கோவை செய்தருளினர், இராசராச தேவர் சபையில், நம்பியாண்டார் நம்பிகள். இவரை " இயற்றமிழ் வல்லோர் " (புரா - வர - 46) என்று வகுத்தருளினர் உமாபதி சிவாசாரியார்.

இதனுள் " தென்னிடைவாய் " (7) என்ற பதி இதுவரை இன்னதென்று விளங்காதிருந்தது. அணிமையில் 25 ஆண்டுகளின்முன் அப்பதியில் திருமதிற் சுவரில் பிள்ளையார் தேவாரப் பதிகம் முழுதும் வெட்டப்பட்டிருந்தமை கண்டெடுக்கப்பட்டது. அதனால், அஃது ஆளுடைய பிள்ளையார் பாடல்பெற்ற பதியென்பதும், அதன் பெயர் விடைவாயி என்பதும், சோழநாட்டுத் தலமென்பதும், முன்பதிப்புக்களிற் கண்ட பாடல் பெற்ற தலக்கணக்கினுள் அகப்படாத தொன்றென்பதும் தெரியவந்தன. இப்போதுள்ள பதிப்புக்களில் (சமாசம்) இப்பதிகமும் சேர்த்து அச்சிடப்பட்டுள்ளது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

அருளிச் செய்த

# க்ஷேத்திரத் திருவெண்பா

### நூல்

**1.** திருத் தில்லைச் சிற்றம்பலம்

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று — நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். க

(இதன் பொருள்) ஓடுகின்ற...கோடுகின்றார் - சரித்து இயங்குகின்ற தன்மை நீங்கிய உடனே, முன் உறவினராயினவர்களும் மனம் திரும்பி வேறுபடுகின்றார்கள்; மூப்பும் குறுகிற்று - கிழத்தன்மையும் பொருந்திற்று; நன்னெஞ்சே !-(ஆதலால்) எனது நல்ல நெஞ்சமே!; நாடுகின்ற...நண்ணாமுன் - நாடி எடுக்கும் நல்ல அச்சுக் கல்லில் இடித்து அமைக்கப்படும் தம்பலத்தினைப் பொருந்துவதன் முன்னரே ; தில்லை...சேர் - திருத்தில்லையின் கண்ணே உள்ள திருச்சிற்றம்பலத்தினை அடைவாயாக.

(விளக்கவுரை) ஓடுகின்ற நீர்மை - ஓடுதல்-இங்கு, இயங்குதல் - சரித்தல் என்ற பொருளில் வந்தது. நீர்மை - தன்மை. அஃதொழிதலாவது நடை ஓய்ந்து இருந்த இடத்துக்கிடத்தலும் இருத்தலுமாகிய நிலை: உற்றாரும் - முன் தமது நெருங்கிய உறவினராயும் நண்பராயும் துணையாயும் பொருந்தினவர்களும் ; உம்மை சிறப்பு ; கோடுதல் - முகமும் அகமும் சுளிந்து பிறிதுபடுதல் ; அச்சில் தம்பலம் நண்ணுதலாவது அச்சில் இடித்து அமைக்கும் தம்பலத்தைப் பொருந்துதல் ; பற்கள் கழன்று வீழ்ந்துவிட்டபோது தம்பலத்தை இடித்து அதுக்குதல் வழக்கு : அஃதாவது பற்கழன்று கிழட்டுப் பருவம் பொருந்தல் என்பது பொருள். இனி, இவ்வாறன்றி இதனை, அச்சில் இடித்துச் சேர்த்த தம்பலத்தை வாயினுள் பொருந்தச் செய்தல் பிண அலங்காரத்துள் ஒன்றாக வரும் வழக்குப் பற்றியதாகக்கொண்டு சாவதன்முன் என்றுரைப்பதுமாம். நல் - அச்சு - இற்று - அம்பலம் நண்ணாமுன் - என்று பிரித்து, அச்சு உடல் என்றும், அம்பலம் - மயானம் என்றும் உரைப்பதுமாம். மேல்வரும் 6-வது பாட்டும், " மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி மயானத்தி லிடுவதன் முன் " என்ற கருத்தும் காண்க. தில்லைச் சிற்றம்பலமே சேர் - தில்லையின்கண் திருச்சிற்றம்பலத்தின் நடம் செய்யும் இறைவரை அடைக; அடைந்தாயானால் அவர் இறப்பும் பிறப்புமாகிய இன்னல்களினின்றும் நீக்குவர் என்பது கருத்து. நன்னெஞ்சே - சேர் - என்று தமது நெஞ்சுக் குபதேச வகையாகக் கூறியது. அதுவேயாக உலகுக்குபதேசித்தபடியுமாம். நன்னெஞ்சே - என்றது நெஞ்சினை - உபதே

சிக்கப்பட்டவரைத் - தம் வயமாக்கும் கருத்து ; சிற்றம்பலமே - ஏகாரம் பிரிநிலை ; நல்லச் சிற்றம்பலமே - ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாம். (கோடுகின்றார் - குறுகிற்று - ஆதலின்) முன் - சேர் என்று காரண காரியமாக உரைத்துக்கொள்க. அச்சில் - என்பதற்கு - உடம்பில் என்றும், தம்பலம் நண்ணுதல் வாயிலுள்ள தம்பலம் மார்பில் வடிதல் என்றும் கூறுவாரும் உளர். நெஞ்சே - சேர் - நினைத்தலேனும் செய் என்ற குறிப்பு.

இத்தலம் சோழ நாட்டில் காவிரி வடகரை 1-வது பதி; கோயில் என்று சிறப்பாக வழங்கப் பெறுவது. இங்கு நாயனுர் இதனைத் தில்லைச்சிற்றம்பலம் என்று வழங்குகிறார். 1

**2.** திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்.

" கடுவடுத்த நீர்கொடுவா ; காடிதா "வென்று
நடுநடுத்து நாவடங்கா முன்னம் - பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட. ௨

(இ - ள்) கடு அடுத்த...என்று - குடிநீர் கொண்டுவா, காடியினைக்கொடு என்று கூறி ; நடுநடுத்து...முன்னம் - நடுநடுங்கி நாச்சொல் அடங்காத முன்னே ; பொடி...முன் - சாம்பல் நிறைந்த சுடுகாட்டிலே சேராத முன்னமே ; பன்...கிட - பல மாடங்களையுடைய தென் குடந்தையில் உள்ள திருக்கீழ்க் கோட்டத்தினைத் துதித்துக் கிடப்பாயாக.

(வி - ரை) கடுவடுத்த நீர் - கடு - கடுக்காய் ; இங்கு அதனையுள்ள மருந்துப் பண்டங்களுக்குக் குறியீடாகிய பொருளில் வந்தது. அடுத்த - இட்டுச் சுருங்கக் காய்ச்சிய ; நீர் - குடிநீர் ; காடி - புளிங்கஞ்சி நீர். இவற்றைக்கேட்டல் நாவறட்சியாலாகுவது ; நடுநடுத்து நாவடங்குதல் - பேச்சுக்குழறி யடங்குதல்; உயிர்போந் தறுவாயில் நிகழும் குறிகளுள் ஒன்று ; " பவனமாய்ச் சோடையாய் நாவெழா " (தேவா - பின் - திருவாரூர்) ; பொடி - (சுடலைச்) சாம்பலைக் குறித்தது ; பாழ்க் கோட்டம் - சுடுகாடு ; சுமம் ; செப்பிக் கிட - முன்கூறிய குறிகள் தொடரும்போது செப்பிக்கிடத்தலன்றி வேறொன்றும் செயல் வலியின்மையாகுமாதலின் கிட என்றார். முன்பாட்டில் சேர் என்றார் அதனுட் குறித்தது மூப்புக் குறுகும் காலமேயாதலின் அது முடுகுமுன்பு சென்று சேரும் வலியுண்மை கருதி. குடந்தைக் கீழ்க்கோட்டம் - இது திருநாகேசுவரசுவாமி கோயில் என வழங்குவது. பாடல் பெற்றதலம். " கூத்தனுர் " என்று இதன் இறைவனை அரசுகள் பாடியருளினர். 2

இது சோழநாட்டில் காவிரித் தென்கரை 27-வது பதி.

**3.** திரு ஐயாறு

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி - வந்துந்தி
யையாறு வாயாறு பாயாமு னெஞ்சமே
யையாறு வாயா லழை. ௩

(இ - ள்) குந்தி...ஊன்றி - (வலியின்மையால்) குந்திக் குந்தி நடந்து உடல் வளைந்து ஒரு கையில் கோலினை ஊன்றி ; நொந்து...பாயாமுன் - வருந்தி இருமி

ஏங்கி நுரைகொண்டு மிக்கு வந்து வலிந்து தள்ளி - ஐ (கோழை) ஆறுபோலத் தொடர்த்து வாயின் வழியே பாய்ந்து ஒழுகாத முன்னம் ; நெஞ்சமே...அழை - நெஞ்சே ! இறைவாது திருவையாற்றினை வாய் திறந்து கூவி அழைப்பாயாக.

(வி - ரை) குந்தி நடந்து - தொடர்ந்து நடக்க வலியின்மையால் அடிக்கடி குந்திக்குந்தி நடந்து ; குந்துதல் - உட்காரு நிலை ; குனிந்து - உடல் வளைந்து ; கூன்கொண்டு ; கோல் - ஊன்று கோல் ; கோலினாற்றாங்கும் துணையின்றி உடல் தாங்கி நடக்க இயலாமை ; நொந்து இருமி - நெஞ்சு வருந்தி இருமல் கொண்டு ; ஏங்கி - வருந்தி முயன்று ; உந்தி - உட்காற்றினால் வலிந்து தள்ளப்பட்டு ; உந்தி - உந்தப்பட்டு எனச் செய்யப்பாட்டு வினையெச்சம்; ஐ - கோழை - (கபம்) ; " ஐமிகுத்த வாயராய்", " ஐமேலுந்தி " ஐ உந்தி வந்து ஆறு (போல) வாயின் ஆறு (வழி) பாயா முன் என்க. ஐயாறு - திருவையாற்றினை ; இரண்டனுருபு விரிக்க. வாயால் அழை - அழைத்தல் வாயின் றொழிலேயாதலின் வாயால் என்றது மிகையாம் போலு மெனின் ?" அற்றன்று ; வாயின்றொழில் ஐ வந்து கெடா முன்னம் அதனைத் தொழிற்படுத்துக என்றதாம் ; ஐயாற்றை அழை என்றது திருவையாற் றப்பனையே யன்றி, அப்பதியினை அழைத்தலே பயன் தரு மென்றதாம் ; " ஐயாறே ! யையாறே ! என்பீ ராகி லல்லறீர்ந் தமருலக மாள லாமே (தேவா).

இது சோழநாட்டில் காவிரி வடகரை 51-வது பதி. 3

## 4. திருஆரூர்

காளை வடிவொழிந்து கையறவோ டையுறவாய்
நாளு மணுகி நலியாமுன் - பாளை
யவிழ்கமுகம் பூஞ்சோலை யாரூரர்க் காளாய்க்
கவிழ்கமுகங் கூம்புகவென் கை. ௪

(இ - ள்) காளை வடிவு ஒழிந்து - காளைபோன்ற குமாரப்பருவத்தின் வடிவம் நீங்கி; கையறவோடு...முன் - துன்பத்தினோடு ஐ பொருந்தி நாளும் கூடி வருந்தாத முன்னே ; பாளை...ஆளாய் - பாளைகள் அவிழ்கின்ற கமுகம்பூஞ்சோலைகள் நெருங்கிய திருவாரூரில் எழுந்தருளிய பெருமானுக்கு ஆளாகி ; கவிழ்க...கை - என் முகம் கவிழ்ந்து வணங்குக ; என் கை கூப்பித் தொழுக.

(வி - ரை) காளை வடிவு - காளைபோன்ற வடிவு ; காளை என்பது மிடுக்குடைய குமாரப்பருவத்தைக்குறித்து நின்றது ; கையறவு - துன்பம் ; செயலின்மை ; ஐ உறவு - கபம் பொருந்துதல் ; ஐயுறவு - உயிர் நிற்குமோ என்னும் ஐயப்பாடு என்ற குறிப்புமாம். முகம் கவிழ்க ! கைகூம்புக ! என்க. தன் வினையாற் கூறியது இச்செயல்கள் இயல்பாகத் தாமே நிகழ்க என்றது. முகம் கவிழ்ந்து வணங்குக. அவிழ்க முகம் - கவிழ்க முகம் - திரிபணி.

இது சோழ நாட்டில் காவிரித் தென்கரை 87-வது பதி. தென்றிருவாரூர் எனப்படுவது. 4

## 5. திருத்துருத்தி

வஞ்சியன நுண்ணிடையார் வாட்டடங்க ணீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து - கஞ்சி

யருத்தொருத்தி கொண்டுவா வென்னுமு னெஞ்சே
திருத்துருத்தி யான்பாதஞ் சேர். ௫

(இ - ள்) வஞ்சியன...சோர - வஞ்சிபோன்ற நுண்ணிய இடையினை உடைய பெண்கள் வாள்போன்ற நீண்ட கண்களினின்றும் நீர்வழிய ; குஞ்சி... இருந்து - தலையினைத் துடையின் மேல்படிய வைத்துத் தாங்கிக்கொண்டு ; கஞ்சி... முன் - கஞ்சியினை அருத்த ஒருத்தியைக் கொண்டுவா என்று சொல்லாத முன்னே ; நெஞ்சே...சேர் - நெஞ்சமே ! திருத்துருத்தியில் எழுந்தருளியுள்ள இறைவரது திருவடியையே சேர்வாயாக.

(வி - ரை) வஞ்சி - கொடி ; வஞ்சிக்கொடி என்றலுமாம் ; கண் நீர் சோர - நோயின் நிலையினை எண்ணி வருந்திக் கண்ணீர் வார ; குஞ்சி - மயிர் ; தலையைக் குறித்தது ; கஞ்சி அருத்த - கஞ்சியினை உண்பிக்க. திருத்துருத்தி - சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று ; காவிரித் தென்கரை 37-வது பதி. அருத்த ஒருத்தி என்பது அருத்தொருத்தி என நின்றது. அருத்து ஒருத்தி என்று கொண்டு பணியாளரைக் காவல் செய்யும் தாதி என்றலுமாம். 5

6. திருக்கோடிகா

காலைக் கரையிழையாற் கட்டித்தங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி - மேலோர்
பருக்கோடி மூடிப் பலரழா முன்னந்
திருக்கோடி காவடைநீ சென்று. ௬

(இ - ள்) காலை...கட்டி - காலினைத் துணியின் கரையைக் கிழித்த இழையினாலே கட்டி ; தம்கை ஆர்த்து - தமது கையினையும் அவ்வாறே கட்டி ; மாலை... முன்னம் - தலைக்கு மாலையணிந்து (கண்களுக்கு) மையெழுதி (உடலின்) மேல் ஒரு பரிய கோடித்துணியினால் மூடிப் பலரும் அழாத முன்னம் ; திருக்கோடிகா... சென்று - நீ சென்று திருக்கோடிகாவினை அடைக.

(வி-ரை) காலை...ஆர்த்து-இறந்தவுடன் அவனது காற்பெருவிரல்களையும் கைப் பெருவிரல்களையும் துணியின் கரையினைக் கிழித்து அதனாற்கட்டுதல் வழக்கு ; உயிர் பிரிந்தபின் சில நாழிகையளவினுள் உடல் விறைத்துக் கைகால்கள் ஒழுங்காக ஆசந்தியிலும் சிதையிலும் அமைக்க வாராஆதலின் அவற்றை உடனே கரையிழையாற் கட்டிவைப்பர் ; கரையிழை துணியின் வலுவுடைய பகுதி ; மை எழுதி - " மையினாற் கண்ணெழுதி " (தேவா). மாலை தலைக்கணிந்து - " மாலை சூட்டி " (தேவா). இவையும், பருக்கோடி மூடுதல் முதலியனவும் பிண அணிவகைகள். பருக்கோடி - பரிய கோடி வேட்டி ; கோடி - புதுத்துணி ; திருக்கோடிகா - காவிரிக்கு வடகரையில் பாடல்பெற்றபதிகளுள் ஒன்று. (17-வது பதி.) 6

7. திருவிடைவாய்

மாண்டுவா யங்காவா முன்ன மடநெஞ்சே
வேண்டுவா யாகி விரைந்தொல்லைப்—பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை. ௭

(இ - ள்) மாண்டு...முன்னம் - உயிர் பிரிந்து வாய்திறந்து போகாத முன்பு ; மடநெஞ்சே - மடமையுடைய நெஞ்சமே ; பாண்டவாய்...திருநாமம் - விரிந்த வாயினையுடைய, தெற்கில் உள்ள, திரு இடைவாயின்கண் எழுந்தருளிய சிவபெருமானது திருநாமத்தினை; வேண்டுவாயாகி விரைந்து ஒல்லை - விருப்பமுடையையாகி மிக விரைவாக ; நின்னிடைவாய் வைத்து நினை - உனது மனத்துள்ளே பதிய வைத்து நினைவாயாக. '

(வி - ரை) மாண்டு - இறந்து ; வாய் அங்காத்தல் - வாய் திறந்திருத்தல் உயிர் பிரிந்த உடலின் நிலை ; பாண்டவாய் - மட்பாண்டம் போன்றகன்ற வாயினையுடைய காவிரித்துறை என்பது பொருள் போலும் இடைவாய் - பதியின் பெயர். கல்வெட்டிலிருந்து இத்தலத்துத் (ஆளுடைய பிள்ளையார்) திருப்பதிகம் கண்டெடுத்தெழுதப்பட்டது. பதிகத்தினுள் விடைவாய் என்று இதன் பெயர் காணப்படுகிறது. இடைவாய் - மனத்தினுள் ; வைத்து - ஊன்றவைத்து.

இதுசோழ நாட்டுப்பதி. திருவிடை வாசல் என்று வழங்குவது, கொரடாச்சேரி நிலயத்தினின்றும் 3 நாழிகை யளவில் உள்ளது. 7

8. திருநெடுங்களம்

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
யெடுங்களத்தா வென்னுமுன் னேழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாத நினை. ௮

(இ - ள்) தொட்டு...காணாது - தொட்டுப்பார்த்தும் தடவியும் நாடியின் துடிப்பு ஒரு சிறிதும் காணாமையால் ; பெட்ட...பேரிட்டு - வறிய பிணம் என்று பேர் சூட்டி ; கட்டி...என்னுமுன் - அத்தா ' கட்டி எடுங்கள் ' என்று சொல்லாத முன்னம் ; ஏழை ..நினை - உறுதுணையில்லாத மடநெஞ்சமே திருநெடுங்களத்தில் எழுந்தருளியுள்ள இறைவரது திருவடிகளை நினை.

(வி - ரை) தொட்டு...காணாது - கண் செவிகெட்டுப் பேச்சும் மூச்சுமின்றி உணர்விழந்து கிடக்கு நிலையில் உயிர் இருக்கிறதா என்று பார்க்க உலகவர் கையாளும் முறை. கை நாடியின் துடிப்புப் பார்த்தல். துடிப்பின்மை உயிர் பிரிந்த நிலைக் குறிப்பு. துடிப்பு - இரத்த ஓட்டத்தினால் உளதாவது. இரத்த ஓட்டம் நின்ற போது துடிப்பும் நிற்கும். அதனுடன் உயிரும் பிரியும் - என்பர்.

பெட்ட...பேரிட்டு - பெட்டப் பிணம் - பெட்ட - வறிய - வெறுவிய - என்ற பொருள் தருவதோ ரிடைச்சொல். பிணம் என்று பேரிட்டு - அவ்வுடலுக்கு அது வரை சூட்டியிருந்த பெயரினை மாற்றிப் பிணம் என்றதோர் பொதுப் புதுப்பெயர் சூட்டி. " பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு " (திருமந்). உயிருள்ளபோது ஒவ்வோருடம்புக்கும் ஓரோர் வெவ்வேறு பெயர். உயிர் பிரிந்தபின் எல்லா உடம்புகளுக்கும் பிணம் என்றதொரே பெயர். கட்டி எடுங்கள் அத்தா – கட்டுதல் - உடலை பாடையில் வைத்துக் கட்டுதல் ; " ஆசந்தி மேல் வைத்து " ( திருமந்) ; எடுங்கள் - எடுத்து நடவுங்கள் ; நெடுங்களம் - சோழ நாட்டுத் திருப்பதி; காவிரித் தென்கரை 8-வதுபதி ; ஆளுடைய பிள்ளையாரது இத்தலத் திருப்பதிகம், பயில்வோர்க்கு வரும் பலவகை இடையூறுகளையும் நீக்கிக் காக்க வல்லது. 8

**9.** குழித்தண்டலை (திருக்கடம்பந்துறை)

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட் டாவி
யொழுகும் பொழுதறிய வொண்ணா—கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு. ௬

(இ - ள்) அழுகு...விட்டு - அழுகும் இயல்புடைய திரிதற்கிடமாகிய உடம்பை விட்டு; ஆவி...ஒண்ணா - உயிர் நீங்கும்போது அறிய வொண்ணாது; கழுகு...முன் - கழுகு உண்டு கழித்துச் சிதைந்து உடல் அலைபடாத முன்னம்; காவிரியின்...கூறு - காவிரியின் தென் கரையில் உள்ள குழித்தண்டலையின்கண் எழுந்தருளியுள்ள இறைவரைச் சொல்வா யாக.

(வி - ரை) அழுகு திரிகுரம்பை - அழுகுதல் - கெடுதல் - அழுகு குரம்பை - திரிகுரம்பை என்று தனித்தனி கூட்டுக. திரிதல் வேறுபடுதல் - "வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப"; கணந்தோறும் வளர்தலும் பின் தளர்தலும் விகாரம். குரம்பை - இருப்பிடம் - கூடு - உடல்; அழுகுதிரி - புண் அழுகி ஏறாமல் வைக்கும் மருந்துத் திரியினையுடைய என்ற குறிப்புடன் உரைப்பதுமாம். ஒழுகும்பொழுது - ஓட்டைக் குடத்தினின்றும் நீர் ஒழுகிக் காணமுடியாது வழிந்துவிடுவது போல, ஓட்டை மாடமாகிய உடலினின்றும் காணலாகாதவாறு ஆவி நீங்கி விடும்பொழுது என்க. உண்டு கழித்து அலையாமுன் என்க. குழித்தண்டலை - குழித்தலை என்று வழங்குவது. கடம்பர் கோயில் என விளக்கமாய் அறியப் படுவது. கடம்பந்துறை என்பது பதிகத்துட் கண்டது. சோழ நாட்டுப்பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று. காவிரித் தென்கரை 2-வது பதி. கீழ் கொங்கு நாட்டின் கிழக்கெல்லை என்பர். 9

**10.** பொது

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலா மாண்ட
முடியரசர் செல்வத்து மும்மை—கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி யுண்ப துறும். ௧0

(இ - ள்) படிமுழுதும்...செல்வத்து - உலகமெல்லாம் தமது வெண்கொற்றக் குடையின் கீழே தங்கும்படி எல்லா உலகங்களையும் ஆட்சி புரிந்த முடி மன்னர்களது செல்வத்தினும்; கடியிலங்கு...உண்பது - மண மிகுந்த இதழ்களையுடைய கொன்றை மலர் மாலையினை அணிந்த சோதியாகிய சிவபெருமானுக்குத் தொண்டு செய்து ஓடேந்தி இரந்து உண்பது; மும்மை - மும் மடங்கு; உறும் - பொருந்துவதாகும்.

(வி - ரை) அரசர் செல்வத்திலும் - தொண்டு பட்டு ஓடேந்தி உண்பது உறும் என்று கூட்டுக.

உறுதல் - மிக்குப் பெரிதாய்ப் பொருந்துதல்.

செல்வத்து - செல்வத்தினும் - செல்வத்தைவிட. உம்மை விரிக்க.

மும்மை உறும் - மூன்றுமடங்கு பெரிதாய்ப் பொருந்தும்.

படிமுழுதும் குடைக்கீழ் (அமரப்) பாரெலாம் ஆண்ட என்க.

கடி - மணம் ; தோடு - பூவிதழ் ; சோதி - ஞானவொளி யுருவினராகிய சிவ பெருமான். "சோதியே சுடரே சூழொளி விளக்கே". (திருவா)

தொண்டுபட்டு - தொண்டாகி அமைந்து ; படுதல் - உண்டாதல்.

இத்திருப்பாட்டின் கருத்தினைப் போற்றி அதுவேயாருக இந்நாயனாரது சரிதங் கூறியருளினர் நம்பியாண்டார் நம்பிகள் ; "முடியரசா, மத்திற்கு மும்மை நன் ருலரற் காயைய மேற்றவென்னும், பத்திக் கடலையடிகள்" (திருத்தொண்டர் திருவந்தாதி - 56).

இவ்வெண்பாக்கள் எல்லாம் உலக நிலைபே றின்மையினையே குறித்துப் பாச நீக்கத் தன்மை காட்டுதலின், "அற்றது பற்றெனி லுற்றது வீடு" என்றபடி, இவற்றை "முத்திப் பதமொரொரர் வெண்பா" (ஷை - 56) என்று அருளினர்.

ஓடேந்தி உண்பது வீடுபெறும் வழி என்பதாம். "நிரந்தர மாக நினையு மடியார், இரந்துண்டு தன்னடி யெட்டச்செய் தானே" - (திருமந்); அரச செல்வம் பற்று வினைத்துப் பிறவிக்கேதுவாகும் ; சோதிக்குத் தொண்டுபட்டு ஓடேந்தி உண்பது வீட்டுக் கேதுவாகும் ; ஆதலின் அதனினும் இது மும்மை உறும் என்றபடி.

மும்மை - பன்மடங்கு பெரிது என்னும் பொருட்டு. 10

**11.** திரு ஆனைக்கா

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாந்—தழீஇயிருந்து
மென்னானைக் காவா விதுதகா தென்னுமுன்
றென்னானைக் காவடைநீ சென்று. கக

(இ - ள்) குழீஇ யிருந்த...பாராட்ட - சுற்றிக் கூடியிருந்த சுற்றத்தார்கள் குணங்களை எடுத்துப் பாராட்டிக்கூற ; வழீஇ யிருந்த......தழீஇ யிருந்தும் - நழுவிக் கிடந்த அங்கங்களை எல்லாம் தழுவிச் சேர்த்து இருந்து கொண்டும் ; என்...முன் - எனது ஆனைபோன்ற இவருக்கு இவ்வாறு நேர்ந்தது தகாது என்று சொல்லித் தூக்கப்படாத முன்னே ; தென்...சென்று - அழகிய திருவானைக்காவினை நீ சென்று அடைவாயாக.

(வி - ரை) குழீஇயிருந்த சுற்றம் - ஒருவரது மரண நிலையின்போது சுற்றத்தார் சுற்றிலும் கூடிப் பரிதவிக்கும் தன்மை பற்றிக் கூறியது.

வழீஇயிருந்த அங்கங்கள் - மரணத்தின்பின் நிலைகுலைந்து கிடந்த அங்கங்கள்.

ஆனைக்கு - ஆனைபோன்ற ஆண்மையுடைய இவனுக்கு. தோற்றமும் நடையும் உவமை. இது - இக்கதி - சாவு.

தேன் - அழகிய ; தென்றிசையில் உள்ள என்றலுமாம்.

திருவானைக்கா - சோழநாட்டில் காவிரி வடகரை 60-வது பதி. 11

**12.** திருமயிலை

குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்ன நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாயின்
இருப்பின்னை யங்காந் திளைத்து. கஉ

(இ - ள்) குயிலொத்து...முன்னம் - குயிலின் நிறம் போன்று இருண்ட கரிய தலைமயிர் கொக்கின் நிறம் போன்று நரைத்து வெண்மயிராகவும், இருமல் மிக்கு விரவவும் உள்ள மூப்புப் பருவம் வாராத முன்னே ; மயிலை...ஆயின் - திருமயிலாப் பூரின்கண் உள்ள திருப்புன்னையங்கானற் பதியினை நினைக்க மாட்டாயாயின் ; இரு...இளைத்து - பின்னர் வாய்திறந்து இளைப்படைந்து இரு.

(வி - ரை) குயில் - குயிலின் கருநிறமும், கொக்கு - கொக்கின் வெண்ணிறமுங் குறித்தன ; ஆகுபெயர்.

குஞ்சி - குயிலொத்து - கொக்கொத்து - என்பன முறையே மயிர் கருமையாயுள்ள இளமைப் பருவத்தையும், அது வெண்மையாய் மாறிய மூப்புப் பருவத்தையும் குறித்தன. இரண்டற்கும் முறையே உரிய பறவைகளை எடுத்து உவமித்தது தமிழ் நயம்; குஞ்சி - ஆண் மக்களின் மயிர் ; இனம் பற்றிப் பெண்மயிரும் கொள்ளப்படும்.

இருமல் பயிலப் புகுதல் - இருமல் மிகுதல். மூப்பின் விளைவுகளுள் ஒன்று : பயிலுதல் - மிகுதல். மூப்பில் இருமல் புகும் என்றதனால் இளமையில் நோயின்மை குறித்தவாறு. இளமைகுறிக்கக் குஞ்சியின் தன்மை யொன்றே பற்றிக் கூறியதும் காண்க.

திருமயிலைப் புன்னையங் கானல் - என்க. புன்னை - தலமரம் ; கடற்கரைப் பதியாதலின் நெய்தற் கருவாதலும் காண்க ; " மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை " (தேவா). புன்னையங் கானல் - ஈண்டு அத்திருக்கோயிலைக் குறித்தது.

பின்னை அங்காந்து இளைத்து இரு - என்க.

அங்காந்து - வாய் திறந்து ; மூப்பின் குறி.

மயிலை - திருமயிலாப்பூர். தொண்டை நாட்டில் 24-வது பதி. 12

## 13. திரு உஞ்சேனைமாகாளம்

காளையர்க ளீளையர்க ளாகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து—சூளையர்கள்
ஒகாளம் செய்யாமு னெஞ்சமே யுஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து. ௧௩

(இ - ள்) காளையர்கள்...ஆகி - காளைப் பருவமுடையவர்கள் ஈளை நோயுடையவர்களாகி ; கருமயிரும்...பொலிவழிந்து - கரிய மயிரும் பூளைப்பூப் போல வெண் மயிராக மாறித் தோற்றம் அழிந்து ; சூளையர்கள்...முன் - தோழியர் பெருமூச்சு விட்டு அழாத முன்னே ; உஞ்சேனை...வாழ்த்து - உஞ்சேனை மாகாளத்தினை நீ கைதொழுது வாழ்த்துவாயாக.

(வி - ரை) காளையர் - காளைப் பருவத்தர் ; காளையர் - காளை போன்ற பருவமுடையோர் ; ஈளை - இருமலும் கபம் மேலிட்டு இளைப்புடன் உள்ள நோயும் ; பூளை - பூளைப்பூ ; வெண்ணிறமுடையது ; பொலிவு - நல்ல தோற்றம் ; சூளையர்கள் - கோயில் உழையிருந்தேவும் ஊழியர்கள் ; பரத்தையர் என்றலுமாம். ஓகாளம்- விசனத்தால் பெருமூச்சு விட்டழுதல் ; அருவருத்தலுமாம். உஞ்சேனை - மாகாளம்- வடநாட்டில் உள்ளதோர் பதி ; காளி பூசித்த பதியாதலின் மாகாளம் எனப்பட்டது; இது விக்கிரமாதித்தனது தலைநகரென்றும், இந்நகர்க் காளி அவனது வழிபடு கடவுள் என்றும் கூறுப ; இப்பதி தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று. " நளிர்சோலை உஞ்சேனை மாகாளம் " (பிள். க்ஷேத் - கோவை - 9) ; " உஞ்சேனை மாகாளம் "

(அரசு. க்ஷேத் - கோ - 8) மத்திய இந்தியாவில் மாளவம் (மால்வா - Malwa) என்ற நாட்டின் தலைநகரம். சோதிலிங்கத் தலங்கள் பனிரண்டனுள் ஒன்று. 13

## 14. திருவளைகுளம்

இல்லும் பொருளு மிருந்த மனையளவே ;
சொல்லு மயலார் துடிப்பளவே ;—நல்ல
கிளைகுளத்து நீரளவே ; கிற்றியே னெஞ்சே
வளைகுளத்து ளீசனையே வாழ்த்து. ௧௪

(இ — ள்) இல்லும்...மனை அளவே - (உயிர் பிரிந்த நிலையில்) மனைவியும் பொருள்களும் குடியிருந்த மனையின் அளவே நின்று விடுவன ; சொல்லும்...துடிப் பனவே - அயலார்களின் சொல்லின் துணையும் உயிர்ப்புத் துடிப்பு உள்ள அளவே யாவன ; நல்ல...நீரளவே - நல்ல சுற்றத்தார்களது தொடர்ச்சியும் பின்தொடர்ந்து வழிவிட்டு நீர்மூழ்கும் குளத்தின் மட்டுமேயாம் ; கிற்றியே...வாழ்த்து-வல்லையாயின் திருவளைகுளத்துள் எழுந்தருளியிருக்கும் இறைவரையே வாழ்த்துவாயாக.

(வி — ரை) இல்-மனைவி ; பொருள்-உடற்றொடர்பற்ற வினைப் பொருள்கள்; உயிர் பிரிந்தபின் உடலைப் புறங்காட்டுக்கு எடுத்துச் செல்லும்போது நிகழும் நிலை பற்றிக் கூறுவது இத்திருப்பாட்டு ; மனையின் எல்லை யளவில் நின்று படுதலின், உயிர்ச் சார்புகளுள் மனைவியும் வினைப் பொருட் சார்புகளையே ஒத்தலின் அவற்றி னுடன் சேர்த்துக் கூறினார் ; “ அத்தமும் வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக, மெத்திய மாதரும் வீடுமட்டே ” (பட்டினத்தார்) என்றதும் காண்க ; சொல் - துணைச்சொல் ; தேறுதல் மொழி ; அயலார் சொல் - என்க.

துடிப்பு - நாடி நடக்கும்நிலை ; இறந்த நிலையில் அயலார் படும் துன்பக் குறி என்றலுமாம்.

நல்லகிளை - பிணத்தின் பின் ஈமத்தளவும் சென்று நீர்மூழ்கித் திரும்பவும் வாராத சுற்றத்தாரு முளராதலின் அவருள் அம்மட்டிற் றொடர்வோரை நல்லகிளை என்றார். நல்ல - பிறிதினியைபு நீக்கிய விசேடணம் ; குளத்துநீர் - நீர்க்குளம் என்க; பின்றொடர்ந்து நீர்மூழ்கித் திரும்பும் வழக்குக் குறித்தது ; “ நீரினின் மூழ்கி நினைப் பொழிந் தாரே ” (திருமந் - 1 - 3) ; கிற்றியே - வல்லாயாயின் ; வல்லவாறு என் றலுமாம் ; கில் - ஆற்றலுணர்த்துவதோ ரிடைச்சொல் ; வளைநளம் - தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று ; சோழநாட்டில் உள்ளது “ வளைகுளமு மறைக்காடு மன்னி னுனை ” (தேவா) ; “ வளைகுளமுந் தளிக்குளமும் ” (அடைவு திருத் தாண்டகம்). 14

## 15. திருச்சாய்க்காடு

அஞ்சனஞ்சேர் கண்ணா ருருவருக்கு மப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன்—னெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து. ௧௫

(இ - ள்) அஞ்சனம்...அப்பதமாய் - மைதீட்டிய கண்களையுடைய பெண்கள் அருவருக்கும் அந்தநிலை கூடி ; குஞ்சி வெளுத்து - மயிர் நரைத்து ; உடலம்

*கோடாமுன் - உடல் வளைந்துபடா முன்னே ; போய்...புலம்பாது - காடு போய்க் கூடும்நிலை வருதலால் புலம்பாமல் ; நெஞ்சமே - நெஞ்சே ; சாய்க்காடு...சார்ந்து - நீ திருச்சாய்க்காட்டினைச் சார்ந்து கைதொழுவாயாக.*

(வி - ரை) அஞ்சனம் - *மை* ; சேர்தல் - *தீட்டுதல்.*

அருவருத்தல் - *வெறுத்தல்* ; பதம் - *பருவம், நிலை* ; உடலம் கோடுதல் - *மூப்பினால் உடல் வளைதல்.*

காடுபோய்க் கூட - *காடுபோய்க் கூடும் நிலை வருதலால்* ; காடுபோய்க் கூடுதல் - *சாவு வந்து சமஞ் சேர்தல் ;* காடு - *சுடுகாடு ;* கூட - *கூடுதலால் ;* போய் - போகும்நிலை *வந்து ;* புலம்புதல் - *மரண வேதனையால் வருந்துதல் ;* புகார் *காவிரிப்பூம்பட்டினம் ;* புகார்ச் சாய்க்காடு - *புகாரின்கண் உள்ள திருச்சாய்க்காடு என்னும் பதி. சோழநாட்டில் காவிரி வடகரை 9-வது பதி.* 15

## 16. திருப்பாச்சிலாச்சிராமம்

*இட்ட குடிநீ ரிருநாழி யோருழக்காய்ச்*
*சட்டவொரு முட்டைநெய் தான்கலத்—தட்ட*
*வருவாச்சா ரென்றங் கழாமுன்னம் பாச்சிற்*
*றிருவாச்சி ராமமே சேர்.* கசு

(இ - ள்) இட்ட...உழக்கா - *கூட்டி அடுப்பில்* இட்ட *குடிநீரானது இரு நாழி ஒரு உழக்காகச் சுருங்க ; சட்ட...அட்ட -* செப்பமாக *ஒரு முட்டை அளவு* நெய் கலந்து ஊட்டியிடவும் ; *அருவாச்சார்...முன்னம் -* உயிர் *நீங்கிற்றே என்று அங்குப் பிறர் அழாத முன்னம் ; பாச்சில்...சேர் - திருப்பாய்ச்சிலாச் சிராமத்தினையே சேர்வாயாக.*

(வி - ரை) இட்ட - வேண்டும் *மருந்துப்* பண்டங்கள் கூட்டி *அடுப்பில் மாட்டியிட்ட ;* குடிநீர் - *கியாழம் ;* இருநாழி...உழக்கா - *நீர் சுருங்கும் அளவு ;* இருநாழி *நீர்விட்டு அஃது ஒரு உழக்காகும்படி சுருக்கி ;* உழக்கா - *உழக்காக ;* ஆ - ஆக என்பது *ஈறுகெட்டது ;* சட்ட - செப்பமாக. “ சட்ட-என்பது செப்பப் பொருட்டாயதோர் *அகரவீற் றிடைச்சொல். அது* சட்டம் என இழிவழக்கில் *மரீஇற்று* ” *என்று* “ *சட்ட* இனியுளது *சத்தேகாண்* ” (போதம். 9 - 2) *என்ற* விடத்து மாபாடியத்தில் உரைத்தது *காண்க.*

முட்டை - *சிறிய கரண்டி ;* அட்ட - வார்க்க, ஊட்டியிட ; அருஆச்சார் - உயிர் *பிரிந்தார் ;* இது *மரூஉ* வழக்கு ; பாச்சிற் றிருவாச்சிராமம் - *திருப்பாச்சிலாச்சிராமம் என்ற சோழநாட்டுப் பதி.* காவிரி *வடகரை - 62-வது பதி.* 16

## 17. திருச்சிராப்பள்ளி

*கழிந்ததுநன் னெற்றுக் கட்டுவிட்டு நாறி*
*யொழிந்த துடனிரா வண்ண—மழிந்த*
*திராமலையா கொண்டுபோ வென்னுமுன் னெஞ்சே*
சிராமலையான் பாதமே *சேர்.* கஎ

(இ - ள்) *கழிந்தது...கட்டுவிட்டு - நல்ல நெற்றுப்போல வறண்ட* உடலம் *கட்டுவிட்டுக் கழிந்தது ; நாறி...*இராவண்ணம் - *துர்நாற்ற மெடுத்து* இருக்க *முடி*

யாதபடி முடிந்தது ; அழிந்தது...என்னுமுன் - அவ்வாறு அழிந்த அதனை இங்கு வைத்திருக்காமல் ஐயா எடுத்துக்கொண்டு போ என்று சொல்லாத முன்னே ; நெஞ்சே...சேர் - நெஞ்சே ! திருச்சிராமலை யிறைவரது பாதமே சேர்வாயாக.

(வி - ரை) நல்நேற்று - நல்ல நெற்றுப்போல வறண்ட உடல்; கட்டுவிட்டு-உருக்குலைந்து ; நேற்றுக்கட்டு - நெற்றாயினபின் காய் முதலியவை தாவரத்தினின் றும் வீழ்தல்போல வீழ்ந்து என்றலுமாம். நாறி - அழுகுதலாய்த் துன்னாற்றமிட்டு ; இராவண்ணம் - இனி வைத்திருக்க முடியாதபடி ; சிராமலை - திருச்சிராப்பள்ளி மலை - என்னும் சோழ நாட்டுப்பதி. காவிரித் தென்கரை 6-வது பதி. 17

## 18. திருமழபாடி

இழவாடிச் சுற்றத்தா ரெல்லாருங் கூடி
விழவாடி யாவிவிடா முன்னம்—மழபாடி
யாண்டானை யாரமுதை யன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. ௧௮

(இ - ள்) இழவாடி...முன்னம் - உயிரினை இழக்கும்நிலை கருதிச் சுற்றத்தார்கள் எல்லாரும் கூடி விழ, வாட்டமுற்று உயிர் உடலினை விடும் முன்னே ; மழபாடி...நீண்டானை - திருமழபாடியில் எழுந்தருளிய ஆண்டவரை, நிறைந்த அமுதம் போன்றவரை, முன்காலத் தொருநாள் அயனும் மாலும் காணாதபடி மேலும் கீழும் நீண்டவரை; நெஞ்சே நினை-நெஞ்சமே நீ நினைவாயாக.

(வி - ரை) இழவாடி - உயிர் போகும் நிலைபற்றிக் கருதி ; ஆடுதல் - கருதிக் கூடி யிரங்குதல் ; கூடிவிழ - - கூடி வீழ்ந்திரங்க ; ஆவி பிரியும்போது சுற்றத்தார் நிலத்தில் வீழ்ந்தும் பிணத்தின்மேல் வீழ்ந்தும் அழும்நிலை குறித்தது. "பூவை மேல் விழுந் தழுதது" (2961) (திருஞான-புரா-1062). வாடி - வாட்டமுற்று ; மழபாடி-சோழநாட்டில் காவிரி வடகரையில் 54-வது பதி. 18

## 19. திரு ஆப்பாடி

உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே யூழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன்—கோள்ளிடத்தின்
தென்றிருவாப் பாடியான் றெய்வமறை நான்கினையுந்
தன்றிருவாய்ப் பாடியான் றாள். ௧௯

(இ - ள்) ஊழ்வினைகள்...முன் - முன்செய்த ஊழ்வினைகள் உயிரைக் கொள்ளை கொள்ளுவதற்காக வந்து கலந்துகொண்டு போவதன் முன்னே ; கொள்ளிடத்தின் தென்திரு ஆப்பாடியான் - கொள்ளிடத் திருநதியின் தென்கரையில் உள்ள திருஆப்பாடி என்னும் பதியில் எழுந்தருளிய இறைவரும் ; தெய்வமறை... பாடியான்தாள் - தெய்வத் தன்மை தருகின்ற வேதங்கள் நான்கினையும் தமது திருவாயினாலே பாடியவரும் ஆகிய இறைவரது திருவடியை ; நெஞ்சமே - நெஞ்சே ; உள்ளிடத்தான் வல்லையே - நினைக்க வல்லாயோ ; நினைக என்றபடி.

(வி - ரை) நெஞ்சே ! ஊழ்வினைகள் கள்ளிட வந்து கலவா முன் - தாள் - உள்ளிட - வல்லையே ; (வல்லையாயின் உள்குக) என்று கூட்டுக.

தான் - இரண்டும் உறுதிப்பொருள் குறித்த இடைச் சொற்களாய் நின்றன; கள்ளிட - திருடுதல் போல, அறியாதவாறு கொண்டுபோக; கள்ளம் செய்ய; கலத்தல் - தொழில் செய்யக் கூடுதல்; ஆப்பாடி - சோழ நாட்டு காவிரி வடகரை 40-வது பதி; மண்ணியாற்றின் தென்கரையில் உள்ளது; சண்டேச நாயனார் பசுக்களை மேய்த்த இடமாயும், அங்கு இறைவர் வெளிப்பட்ட இடமாயும் உள்ளதால் இப்பெயர் பெற்றது; இரண்டும் காவிரியின் பிரிவுகளாதலானும், காவிரியின் கிளையாதலானும், மண்ணி, கொள்ளிடம் என்றுபசரிக்கப்பட்டது. அன்றிக் கொள்ளிடத்தின் தெற்கில் உள்ளது ஆப்பாடி என்பதும் பொருந்தும். தேன் - அழகிய என்றலுமாம்.

வாய்ப் பாடியான் - வாயினாலே பாடியவர். 19

**20.** கச்சித் திரு ஏகம்பம்

என்னெஞ்சே யுன்னை யிரந்து முரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை யுரித்தானை வண்கச்சி
யேகம்பத் தானை யிறைஞ்சு　　௨௦

(இ - ள்) என்னெஞ்சே - எனது நெஞ்சமே; கன்னம் செய்வாயாகில் - கேட்பாயாகில்; உன்னை இரந்தும் உரைக்கின்றேன் - உன்னைக் கெஞ்சியும் வேண்டிச் சொல்கின்றேன்; வன்னெஞ்சேய்...ஏகம்பத்தானை - வலிய கொடிய நெஞ்சினையுடைய பெரிய அசைகின்ற யானையினை உரித்தவரை, வண்மையுடைய திருக்கச்சி ஏகம்பத்தில் எழுந்தருளிய திருவேகம்ப நாதரை; காலத்தால் - உயிருள்ள கால முண்டாகவே; இறைஞ்சு - வணங்குவாயாக.

(வி - ரை) கன்னம் - காது; கன்னஞ் செய்தல் - செவிசாய்த்துக் கேட்டல்; இரந்தும் - மிகக் கெஞ்சியும்; காலத்தால் - உயிரும் ஆற்றலுமுள்ள காலத்திலே; "காலமுண் டாகவே காதல்செய் துய்மின்" (திருவா); காலத்தால் - இறைஞ்சு என்று கூட்டுக; வன்னெஞ்சு - மாறுபட்ட வலிய கொடிய நெஞ்சு; மா - பெரிய; உருவுடைய; கம்பத்து ஆனை - கம்பம் - அசைவு; எப்போதும் அசைவுடனிருக்கும் யானையினது இயல்பு குறித்தது; கம்பம் - நடுக்கம் என்று கொண்டு பெரிய நடுக்கத்தை விளைக்கும் என்றலுமாம்; கம்பம் - கட்டுத்தறி என்றலும் பொருந்தும். வண் - வளப்பமாவது முத்தி நல்கும் ஏழு பெருந்தலங்களுள் ஒன்றாதலும் எல்லா அறங்களையும் வளர்க்கும் அம்மைக் கிருப்பிடமாதலுமாம்.

ஏகம்பம் - திரு ஏகம்பம்; இறைவர் எழுந்தருளியுள்ள இடம். "கருவார் கச்சித் திருவே கம்பம்" (தேவா.) தொண்டை நாட்டு 1-வது பதி. 20

**21.** திருப்பனந்தாள் - தாடகேச்சரம்

கரமூன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரமூன்றி வாய்குதட்டா முன்னம்—புரமூன்றுந்
தீச்சரத்தாற் செற்றான் றிருப்பனந்தாட் டாடகைய
வீச்சரத்தான் பாதமே யேத்து.　　௨௧

(இ - ள்) கரம் ஊன்றி...முன்னம் - கையை ஊன்றிக், கண்கள் குழிந்து, கால்கள் தடுமாறி, ஆதரவுக்கு மற்றும் ஒரு ஊன்றுகோலினைப் பற்றி ஊன்றி, வாய்

குதட்டாத முன்னே ; புரமூன்றும்...எத்து - முப்புரங்களையும் தீயம்பினால் எரித்த இறைவரும், திருப்பனந்தாளின்கண் உள்ள தாடகை யீச்சரத்தில் எழுந்தருளிய இறைவரும் ஆகிய சிவபெருமானது பாதத்தினையே போற்றுக.

(வி - ரை) கரம் ஊன்றுதல் முதலாகிய ஐந்தும் மூப்பின் குறிகள் ; கரம் ஊன்றுதல் - உடலைப் பொறுக்கலாற்றாது கையூன்றுதல் ; கண் இடுங்குதல் - கண் குழிதல் ; கால் தூலதல் - கால்கள் நடக்கலாற்றாது பின்னித் தடுமாறுதல் ; மற்றோர் மரம் - ஊன்று கோல் ; மற்று ஓர் - கை ஊன்றுதலுடன் மேலும் ஒரு ; குதட்டுதல் - பற்கள் விழுந்துவிட்டமையால் வாய் குதட்டி மொழிதல் ; உண்ணுதல் ; தீச்சரம் - தீயினைக் கூராக உடைய அம்பு ; தாடகைய ஈச்சரம் - திருப்பனந்தாளின் கண் உள்ள கோயில். பனந்தாள் - பதி ; சோழநாட்டுக் காவிரி வடகரை 36-வது பதி. 21

## 22. திரு ஒற்றியூர்

தஞ்சாக மூவுலகு மாண்டு தலையளித்திட்
டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சங்
கரந்துண்ட கண்டர்தம் மொற்றியூர் பற்றி
யிரந்துண் டிருக்கப் பெறின். உஉ

(இ - ள்) நஞ்சம்...பெறின் - விடம் மறைந்து இருக்கும்படி அமுது செய்த கழுத்தினையுடைய இறைவரது திருவொற்றியூரினைப் பற்றுக் கோடாகக் கொண்டு அங்கே பிச்சை யேற்று உண்டு வாழ்ந்திருக்கும் பேறு பெற்றால் ; தஞ்சாக...வேண்டேன் - தம்பால் ஒப்படைக்கப் பெற்ற அடைக்கலப் பொருளாகக் கொண்டு மூன்றுலகங்களையும் ஆட்சிபுரிந்து காத்துக் குறைவின்றிப் பெற்றாலும் அதனை யான் விரும்பமாட்டேன்.

(வி - ரை) பெறினும் - வேண்டேன் - என்று கூட்டுக.

தஞ்சாக - அடைக்கலப் பொருளாக ; மூவுலகு - மேல் கீழ் நடு என்ற மும்மை உலகங்கள் ; தலையளித்தல் - காத்தல் ; எஞ்சாமை - குறை வில்லாமை ; கரந்து - மறைந்துறையும்படி ; கரந்திட - என்க. பற்றி - பற்றுக்கோடாகக் கொண்டு ; "முடியரசர் செல்வத்து மும்மை...தொண்டுபட்டு, ஓடேந்தி உண்ப துறும்" (10) என்ற கருத்து. இக்கருத்து முடியரசராகிய ஒருவர் திருவுள்ளத்தினின்றும் போந்தமையின் மிக்க வலிமையும் சிறப்புமுடையது என்றெடுத்து நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதியுட் (56-ல்) போற்றியமை காண்க. இக்கருத்து ஐயடிகள் திருவுள்ளத்தே உறைத்து ஊன்றியிருந்தமை அவர் தமது முடி அரசைப் பொருளாகக் கொள்ளாது துறந்தமையாலும், முன் சொன்னதன்றி, ஈண்டு, மேலும் வற்புறுத்திக் கூறிய வாற்றாலும் கருதப்படும். மேற் பாட்டும் பார்க்க.

இருத்தல் - ஈண்டு வாழ்தல் என்னும் பொருட்டு.

ஒற்றியூர் தொண்டை நாட்டில் 20-வது பதி. பட்டினத்தார் வரலாறும், திருவாக்குக்களும் ஈண்டுக் கருதத் தக்கன. 22

## 23. பொது

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விளையாதே—கூற்றுதைத்தான்

ஆடரவங் கச்சா வரைக்கசைத்த வம்மான்றன்
பாடரவங் கேட்ட பகல் ௨௩

(இ - ள்) கூற்றுதைத்தான்...பகல் - இயமனை உதைத்தவரும் ஆடுகின்ற பாம்பினைக் கச்சாக இடையிலே கட்டிய அம்மானும் ஆகிய சிவபெருமானது பாடலாகிய வேத கீதத்தினைக் கேட்ட ஒரு பகலின் விளைவுக் கீடாகிய பயனாக: நூற்றனைத்தோர்...விளையாதே - நூற்றுக் கணக்காகிய பல ஊழிகாலம் நுண்ணிய வயிர வெண்குடையின் நிழலின் கீழே வீற்றிருந்து அரசாண்ட அரசச் செல்வம் பெற்ற பயன் விளையாது.

(வி - ரை) அனைத்து - அளவு; ஊழி - நீண்ட கால அளவு; யுகம் என்பர்; வயிர வெண்குடை - வயிரம் போன்று ஒளி விளங்கும் வெண்கொற்றக்குடை; வயிரமணிகள் வரிசை பெறக் கட்டிய என்றலுமாம்; குடைக்கீழ் வீற்றிருந்த செல்வம் - அரசச் செல்வம். விளையாது - ஈடாக உளதாகாது.

பகல் - சிறு கூறுகியபோது என்ற பொருளில் வந்தது.

நூற்றனைத் தோர் பல்லூழி - என்பது காலநீட்டிப்பின் பேரெல்லையும், பகல் காலத்தின் சிற்றெல்லையும் குறித்தன; பகலின் பயன் ஊழிச் செல்வத்தினாலும் வாராது என்றபடி; இவ்வாறன்றி ஒரு பகற்கேட்ட பயனாக ஊழி அரசச் செல்வம் விளையும் என்பாரு முண்டு; இப்பொருளில் விளையாதே - ஏகாரம் வினா. அரசச் செல்வத்தை ஒரு பொருளாகக் கொள்ளாது துறந்தவர் இந்நாயனார் ஆதலின் இப்பொருள் சிறப்பின்று; பாடு அரவம் - பாட்டு - வேத நாதம்; பாட்டு - வேதம்; பாட்டரவம் என்பது எதுகை நோக்கிப் பாடரவம் என நின்றது. "வீடகத்தே புகுத்திடுவான்" (திருவா - சத - 11) என்புழிப் போல. 23

## 24. திருமயானம் (திருக்கடவூர் மயானம்?)

"உய்யு மருந்திதனை யுண்மி" னெனவுற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்காற்—பைய
வெழுந்திருமி "யான்வேண்டே" னென்னுமுன் னெஞ்சே
செழுந்திரு மயானமே சேர். ௨௪

(இ - ள்) உய்யும்...காட்டியக்கால் - "இஃது உய்விக்கும் மருந்து; இதனை உண்ணுங்கள்" என்று சொல்லி உற்றார்கள் கையினைப் பிடித்து எதிரே காட்டிய போது; பைய...என்னுமுன் - மெல்ல எழுந்து இருமி எனக்கு இது வேண்டாம் என்று சொல்லும் நிலை வாராமுன்னே; நெஞ்சே...சேர் - நெஞ்சமே செழிப்புடைய திருமயானத்தை நீ அடைவாயாக.

(வி - ரை) "உய்யும் - உண்மின்" என - இது மருந்தினை உண்பிப்பதற்காக உற்றார் கூறும் ஊக்கமொழி; நோய் மிகுதியாற் கிடப்போர் உயிர் வாழ்க்கையினை வெறுக்குமியல்பு சார்தல் பற்றி உற்றார் இவ்வாறு ஊக்கப்படுத்துதல் வழக்கு: உய்யும் - உய்விக்கும்; பிறவினை; கையைப் பிடித்து எதிரே காட்டுதல் - நோய் மிகுதியாற் கண்மூடிக்கிடக்கின்றாராதலின் கையைப் பிடித்து மருந்தினைக் காட்டுதல் வேண்டப்பட்டது; பைய எழுந்து – மெல்ல எழுதல், மாட்டாமைக் குறிப்பு; இருமி - எழுகின்ற முயற்சிதானும் இருமலை விளைக்கும்படி நோய் முற்றிய

இல ; யான் வேண்டேன் - நோய் மிக்கதனால் உயிர் வாழ்தலின்பாலும் வெறுப்பு வரும் இயல்பு ; திருமயானம் - இடமும் பொருளும் நோக்கி ஈண்டுத் திருக்கடவூர் மயானம் என்பது கருதப்படும். (ஏனைத் திருநாலூர் மயானம், திருக்கச்சி மயானம் முதலியவையும் உள) ; செழுமை - மக்கள் நோய்ப்பட்டு இறந்தபின் சாரும் இழிவுபட்ட இடுகாடாகிய மயானம் போலன்றி, இறைவர் வாழும் அழிவில்லாத முத்தி தரும் இன்பத்திற் கிடமாகிய செழிப்புடைய தென்பார் செழும் என்ற அடை கொடுத்தோதினார் ; திரு என்ற கருத்துமது ; பிறிதினியைபு நீக்கிய விசேடணங்கள். திருகடவூர் மயானம் - சோழநாட்டில் காவிரித் தென்கரை 48-வது பதி. 24

திருச்சிற்றம்பலம்

க்ஷேத்திரத் திருவெண்பா மூலமும்,

கோவை - சிவக்கவிமணி — C. K. சுப்பிரமணிய முதலியார் எழுதிய

உரையும் முற்றியன.